மலர்-3 இதழ்-57 ஜனவரி 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play

# வருடந்தோறும் திருவிழா

# கடல் மண், சந்தனம் ஏற்கும் சிவன்

# சிவனே முருகனாகும் அற்புதம்



# திருநீறை வீணாக்கி சூட்சும பாவத்திற்கு ஆளாகாதீர்கள்

திருநீறு என்பது சிவப் பிரசாதமாகும், சிவபெருமானே விரும்பி உடல் முழுவதும் பூசிக்கொள்ளும் பாக்கியம் பெற்றது.

குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு, அதற்குரிய மந்திரங்களை திருநீற்றில் உருவேற்றி அந்த திருநீற்றை பூசிவந்தால் எப்பேர்பட்ட நோய்களும் தீரும்.

மந்திரம் மட்டுமின்றி தந்திரமாகவும் விளங்குவது திருநீறு, தேவர்களை விட மேலாக திருநீறு விளங்குகிறது. மனிதகுலத்திற்கு முக்தி தருவதாகவும் திருநீறு விளங்குகிறது.

பக்தி செய்ய துணை நிற்கிறது, சித்தி அளிக்க துணைபுரிகிறது.

தேவாரம், திருவாசகம் போன்ற பாடல்களில் திருநீற்றைப் பற்றி பல பாக்கள் உள்ளது.

சீராம் வெண் ணீற்றுத் திரிபுண் டரம் விடுத்தே
பேரான முத்தி பெறவிரும்பல் - ஆரமிர்த
சஞ்சீ வியைவிடுத்தே சாகா திருப்பதற்கு
நஞ்சே புசித்ததுபோ நாடு

❖❖❖

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே

மேற்கண்ட தேவாரம் திருவாசகப் பாக்கள் திருநீற்றின் மகிமையை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த திருநீற்றை பக்தர்கள் கடமைக்காக வாங்கி பூசிக்கொள்வது மட்டுமின்றி, மிகுந்தவற்றை கோயில் தூண்கள், சுவர் போன்றவற்றில் போட்டுவிடுகின்றனர்.

கோவிலுக்கு சென்றால் பாவம் தீரும் என்பதை அறிந்த பக்தர்கள் இறைவனின் பிரசாதமான திருநீருக்கு உரிய மரியாதை அளிக்காதது வருத்தமே.

இறைவனை எவ்வளவு மதிக்கிறோமே அந்த அளவிற்கு திருநீற்றிற்கும் முக்கியத்துவம் தர வேண்டும்.

திருநீற்றை சுற்றிலோ, தூண்களிலோ கொட்டும்போது சூட்சும ரீதியாக பாவம் வந்து சேரும்.

எப்படி கோயில் சுவற்றில் தாங்கள் கொட்டிய திருநீறு படிந்திருக்கிறதோ அதுபோல் தங்களுடையை துன்பங்கள் படிந்தே இருக்கும் தவிர நீங்காது என்பதுதான் சூட்சம உண்மையாகும்.

திருநீற்றினை பற்றி நன்கு அறிந்த சிவனடியார்கள், சிவாச்சாரியார்கள், ஓதுவார்கள் திருநீற்றினை கீழே இடமாட்டார்கள்.

பிரசாதமாக வாங்கும் திருநீற்றை முழுவதுமாக நெற்றியிலோ, உடலிலோ முழுவதுமாக பூசிக்கொள்வதே சிறப்பு.

அப்படி இல்லையென்றாலும், மிகுந்த திருநீற்றை அதற்கென வைத்திருக்கும் பாத்திரம் போன்றவற்றில் இடுவது சிறப்பு.

புண்ணியம் தேடவும், பாவம் விலகவும் கோயிலுக்குச் செல்லும்போது, இதுபோன்ற சிறு சிறு தவறுகளால் பாவத்தை பெருக்கிக் கொள்ளாமல் இருப்பதே சிறப்பாகும்.







# மூக்குத்தியின் ரகசியம்

மூக்குத்தி குத்திக் கொள்வதால் பெண்களுக்கு பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக்காற்றுக்கு சக்தி அதிகம். இதனால் பண்டைய காலத்திலேயே மூக்கு குத்திக் கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்கு குத்துவதினாலும் காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன.

உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால் அந்த தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்லாமல் மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். பருவ வயதை அடைந்த பெண்களுக்கு கபாலப் பகுதியில் அதாவது தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப்படுகிறது. மூக்குக் குத்துவதால் பெண்கள், சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள் மற்றும் மனத்தடுமாற்றம் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

கைரேகை, சோதிடம் பார்ப்பவர்கள் ஆண்களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடதுகையும் பார்த்து பலன் கூறுவது வழக்கம். ஆண்களுக்கு வலப் புறமும் பெண்களுக்கு இடப் புறமும் பலமான, வலுவான பகுதிகளாகும்.

ஞானிகளும் ரிஷிகளும் தியானம் செய்துபோது வலது காலை மடக்கி இடது தொடை மீது போட்டு தியானம் செய்வார்கள். இதற்கு காரணம் இடது காலை மடக்கி தியானம் செய்யும் போது வலது பக்கமாக சுவாசம் போகும். வலது என்றால் தமிழில் வெற்றி என்று பொருள். வலது பக்கமாக சுவாசம் செல்லும்போது தியானம், பிராத்தனை எல்லாம் கண்டிப்பாக பலன் தரும்.

இந்த நாடியை அடக்குவதாக இருந்தால் வலது பக்க சுவாசத்திற்கு மாற்றவேண்டும். அதே மாதிரி ஒரு அமைப்புத்தான் மூக்குத்தி.

நமது மூளைப் பக்கத்தில் ஹிப்போதெலமஸ் (Hippotelamas) என்ற பகுதி இருக்கிறது. நரம்பு மண்டலங்களை கட்டுப்படுத்தக் கூடிய, செயல்படக் கூடிய அளவு சில பகுதிகள் உள்ளன.

அந்தப் பகுதியில் சில உணர்ச்சி பிரவாகங்கள் உள்ளன. இதனைச் செயல்படுத்துவதற்கு அந்தப் பகுதி துணையாக இருக்கிறது. இப்படி இந்தப் பகுதியை அதிகமாக செயல் படுத்துவதற்கும் பெண்ணின் மூக்கில் இடது பக்கத்தில் குத்தக் கூடிய முக்குத்தி வலது பக்க மூளையை நன்றாக செயல் படவைக்கும்.

இடது பக்கத்தில் முளை அடைப்பு என்றால் வலது பக்கத்தில் நன்கு வேலை செய்யும். வலது பக்கம் அடைத்தால் இடது பக்கம் உள்ள மூளை அதிகமாக இயங்கும்.

இன்றைய நம்முடைய மனித வாழ்க்கைக்கு அதிகமாக இந்த இடது பக்க மூளையை அடைத்து வலது பக்கமாக வேலை செய்ய வைக்கிறோம். அதனால் வலது கை, வலது கால் எல்லாமே பலமாக உள்ளது.

இதனால்தான் நம் முன்னோர் பெண்களுகு மூக்கு குத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர்.



# அன்பு, பக்தியை மட்டுமே ஏற்கும் இறைவன்

## பிராணிகளுக்கு அருளிய ரகசியம்

கடவுளுக்கு முன் அனைவரும் சமமே, எந்தக் கடவுளும் சாதியை பார்ப்பதில்லை. ஒருபடி மேலே சொல்ல வேண்டுமென்றால், இறைவனிடம் பக்தியும், அன்பும் செலுத்தினால் மனிதர்கள் மட்டுமின்றி, ஜீவராசிகளுக்கும் அருள் புரியும் அற்புத சக்திதான் கடவுள்.

இதை பல இடங்களில் மனிதர்கள் புரிந்து கொள்ளாமல் ஜாதி ரீதியாகவே இறைவனை அனுகுவதால்தான், இறைவனுடனான நேரடி தொடர்பு தற்போது இல்லாமல் இருக்கிறது.

வசதி வாய்ப்புக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவதால்தான் இறைசக்தி தற்போது மறைந்துள்ளது. ஆனால் இறைவன் இரண்டு விஷயத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் தருபவராக உள்ளார். அதில் ஒன்று பக்தி, மற்றொன்று அன்பு இந்த இரண்டைத் தவிர வேறு எது இருந்தாலும், இறைவனை கண்டிப்பாக அணுக முடியாது.

மேற்கண்ட இரண்டு விஷயங்களும் ஒரு மனிதனிடத்தில் வரவேண்டுமானால், அவன் ஆடம்பரம், வசதி, வாய்ப்பு, மரியாதை, உயர்ந்தவர், தாழ்ந்தவர், போன்ற அடிப்படைவாத எண்ணங்களை துறந்தால்தான் மேற்கண்ட அன்பு, பக்தி என்பது மனித மனதில் தங்கும்.

அன்புக்கும் பக்திக்கும் இறைவன் அடிமை என்பதை விளக்கும் விதமாக....

சமயக்குறவர்கள் நால்வர் பக்தியுடன் பாடிய தலங்களை “பாடல் பெற்ற தலங்கள்” என்கிறோம்.

அதே சமயத்தில், ஐந்தறிவு படைத்த மிருகங்கள், பறவைகள் உருவில் கந்தர்வர்கள் அன்பால் பூஜித்த தலங்களும் பல உண்டு.

- எறும்பு பூஜித்த தலம் – திருவெறும்பூர்
- நாரை பூஜித்த தலம் – திருநாறையூர்
- ஆடு (முகத்துடன்) பூஜித்த தலம் – திருவாடானை
- சிலந்தி பூஜித்த தலம் – திருக்காளத்தி, திருவானைக்காவல்
- சிட்டுக்குருவி பூஜித்த தலம் – வடகுறங்காடு துறை
- சக்ரவாஹப்பறவை பூஜித்த தலம் – சக்ராப்பள்ளி
- குரங்கு, அணில், காக்கை பூஜித்த தலம் – குறங்கணில்முட்டம்
- கருங்குருவி பூஜித்த தலம் – திருவலிதாயம், வலிவலம்
- ஜடாயு பூஜித்த தலம் – வைதீவரன் கோயில், திருவியலூர், திருப்பள்ளிமுக்கூடல்
- யானை பூஜித்த தலம் – திருநின்றவூர், திருநாட்டியத்தான்குடி, இன்னம்பூர், திருவானைக்காவல், திருக்காளத்தி, காளையார்கோயில், திருவாடானை, கோட்டூர், திருப்புன்னவாசல், கோட்டாறு.
- வெள்ளை யானை பூஜித்த தலம் – பெண்ணாடம், திருவெண்காடு
- ஆமை பூஜித்த தலம் – (திருமணஞ்சேரி) கீழத்திருமணஞ்சேரி
- குயில் பூஜித்த தலம் – திருக்குளம்பியம்
- முயல் பூஜித்த தலம் – திருப்பாதிரி புலியூர்
- காமதேனு (பசு) பூஜித்த தலம் – திருவாவடுதுறை, திருக்குளம்பியம், பாம்பணி, திருக்கொண்டீச்வரம், பெண்ணாடம், திருநின்றவூர், திருவாமாத்தூர், பந்தநல்லூர், கோகர்ணம் ஆகியவை
- நண்டு பூஜித்த தலம் – கீழைத் திருக்காட்டுப்பள்ளி, திருநீடூர், திருந்துதேவன்குடி
- வண்டு பூஜித்த தலம் – திருவண்டுதுறை, திருநல்லூர், வாளாளிப்புத்தூர்
- நாகம் (பாம்பு) பூஜித்த தலம் – திருநாகேச்வரம், கும்பகோணம் நாகேச்வரர், பாம்பணி நாகநாதர், திருக்காளத்தி, திருப்பனந்தாள்
- மயில் பூஜித்த தலம் – மயிலாடுதுறை, மயிலாப்பூர்
- வெள்ளை பன்றி பூஜித்த தலம் – சிவபுரம்.

மனிதர்கள் பக்தியால் பாடி இறைவனை வழிபட்டதை போன்று விலங்குகளும், பறவைகளும், பூச்சிகளும் அன்பால் வழிபட்டு இறைவனை பூஜித்ததால் அவைகளுக்கு முக்தி அளித்து இறைவன் ஆட்கொண்டான்.

இதன் மூலம் இறைவனை அடைய பக்தியும், அன்பும் மட்டுமே போதும் என்பது விளங்குகிறது.

இருந்த இடத்திலிருந்து, பக்தியுடனும், அன்புடனும் இறைவனை வழிபட்டாலே போதும் என்பதை இறைவன் நமக்கு உணர்த்துகிறார்.



# திருப்பதியில் கூட தமிழ் ஒலிக்க வைத்த ஆண்டாள்



அர்ஜுனனுக்கு பகவத் கீதையை கூறிய கிருஷ்ண பகவான், வைகுந்தம் சென்று விடுகிறார். ஆனால் தான் சொன்ன பாடம் அர்ஜுனன் உட்பட பலருக்கும் புரியவில்லையே என்று நினைத்தார்.

அப்பா அறிவுரையைக் கேட்காத குழந்தைகளும் அம்மா கொஞ்சி சொன்னால் கேட்டுக் கொள்வார்கள். அது போல தனது பகவத் கீதையை இவ்வுலக மக்களான பெருமாளின் குழந்தைகள் ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று விரும்பிய பகவான், மஹாலஷ்மி தாயாரிடம் “நீ சென்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடு” என்று கூறுகிறார். “நீங்கள் அவதாரம் எடுத்தபொழுதெல்லாம் உங்களுடன் பிறவி எடுத்து எடுத்து இளைத்தேன். என்னால் ஆகாது” என்று கூறிவிடுகிறாராம் மஹாலஷ்மித் தாயார். “அப்போது நான் சென்று குழந்தைகளை கரை சேர்க்கிறேன்” என்று பூமித் தாயார் வைகுண்டத்தில் இருந்து பூலோகத்திற்கு வந்து பிறந்து கோதை என்ற நாமகரணம் பெற்றாள் என்பர் ஆன்மீக சொற்பொழிவாளர்கள்.

விஷ்ணு சித்தர் என்பவர் ஸ்ரீவில்லிப்புத்தூரில், ஒரு மலர் தோட்டம் அமைத்து இருந்தார். அத்தோட்டத்தில் செண்பகம், வகுளம், மல்லிகை, முல்லை ஆகிய மலர் செடி, கொடிகளுடன் துளசிச் செடியையும் வளர்த்து வந்தார். இவற்றைக் கொண்டு பின்னல், கண்ணி, கோவை ஆகிய அழகிய வடிவங்களில் மாலை கட்டி அவ்வூரில் உள்ள வடபத்திரசாயிக்கு மாலை அணிவித்து வந்தார். ஒரு நாள் அத்தோட்டத்தில் நன்கு வளர்ந்து இருந்த துளசிச் செடியின் அடியில் பெண் குழந்தை ஒன்றைக் கண்டெடுத்தார். அக்குழந்தைக்கு கோதை என நாம கரணம் சூட்டினார் விஷ்ணு சித்தர். அக்குழந்தைக்கு தானே தந்தையுமானார்.

கண்ணனின் அவதாரக் கதைகளைக் கேட்டுக் கேட்டே வளர்ந்த கோதையோ, கண்ணன்பால் ஈர்ப்புக் கொண்டாள். கண்ணனையே கணவனாக வரித்தும் கொண்டாள். பிஞ்சில் பழுத்தாளைச் சொல்லு என்றபடிக்கு அவள் பிஞ்சு மனம் கண்ணன்பால் சென்றது. அவனையே மணாளனாக வரித்த பின் அவனுக்கு தான் ஈடாக இருக்கிறோமா என்பதை அறிய, வடபத்திரசாயிக்கு மாலை போடும் முன் தான் போட்டு அழகு பார்ப்பாளாம் கோதை. இதனை ஒரு நாள் கையும் களவுமாகப் பிடித்துவிடுகிறார் விஷ்ணு சித்தர். அன்பு மகளிடம் என்றும் இல்லாத திருநாளாகக் கோபித்துக் கொண்டு விடுகிறார் விஷ்ணு சித்தர்.

மலர்களை எல்லாம் பறித்து ஒரே மாலையாகக் கட்டிவிட்டதால், புது மாலை கட்டி விடலாம் என்று பார்த்தால் இன்று தோட்டத்தில் எஞ்சிய மலர்களும் மாலை கட்டப் போதாது. கோதை போட்டுக் கழித்த மாலையையும் பெருமாளுக்குப் போட முடியாதே.

இவ்வாறு எண்ணியபடி இரவில் வெதும்பிய மனதுடனேயே தூங்கிவிட்டார் விஷ்ணு சித்தர். அவரது கனவில் தோன்றிய பெருமாள், ஒன்றும் அறியாதது போல, வழக்கமாகத் தனக்கு அணிவிக்கும் மாலை எங்கே எனக் கேட்கிறார்.

விஷ்ணு சித்தரோ நடந்த கதையைக் கூறி, நிர்மால்யமான மாலையை அணிவிக்க தன் மனம் ஒப்பவில்லை என்று பதிலளித்தார்.

அதற்கு கனவில் வந்த பெருமாள், பல நாட்களாக இப்படித்தான் நடக்கிறது. ஆண்டாள் சூடிக் களைந்த மாலையின் நறுமணமே தனக்கு மிகவும் விருப்பமானது என்கிறார்.

அதன் பிறகு ஆண்டவனின் மனதையே கவர்ந்து ஆண்டுவிட்டதால், கோதை ஆண்டாள் என அழைக்கப்பட்டாள். இது இப்படியே தொடர, தன் பெண்ணுக்கு மணம் முடிக்கும் காலமும் வந்துவிட்டது என அறிந்த விஷ்ணு சித்தர், இதனை ஆண்டாளிடம் தெரிவிக்கிறார். அவளோ கண்ணாளனாகக் கண்ணனைத் தேர்ந்தெடுத்துவிட்டதால், “மானிடர்க்கென்று வாழ்க்கைப்பட்டால் உயிர் வாழமாட்டேன்” என்று கூறிவிடுகிறாள். வளர்ப்புத் தந்தையோ என்ன செய்வார்? அவள் மனக் கண் முன் 108 திவ்ய தேசப் பெருமாளையும் கொண்டு வந்து நிறுத்தி சுயம்வரம் நடத்துகிறார். அவர்களில் ஆண்டாள் தேர்ந்தெடுத்தது ஸ்ரீரங்கத்து திருவரங்கனையே.

திருவரங்கனும் ஒப்புதல் அளித்து நாள் குறிக்க, ஒரு சிறந்த பல்லக்கில் ஆண்டாளை ஏற்றி மேளதாளத்துடன் திருவரங்கம் அழைத்துச் சென்றார் விஷ்ணு சித்தர். அங்கே அரங்கன் அனந்த சயனத்தில் ஆதிசேஷன் மேல் கிடந்த வண்ணத்தில் காட்சி அளித்தார். ஆதிசேஷனின் உடல் படி போல் சுற்றிச் சுற்றிக் கிடந்ததால், அதில் தன் பிஞ்சுப் பாதங்களை பதித்து ஏறிய ஆண்டாள் பெருமாளுடன் ஒன்றெனக் கலந்தாள் என்கிறது புராணம்.

வைகுண்ட வாசனுடனே இருந்திருக்கலாமே எதற்காக வந்தாள்? எதற்காகக் கலந்தாள்? இடைப்பட்ட காலத்தில் அவள் செய்து வைத்த பாடல்கள் திருப்பாவை என்ற 30 பாடல்கள் கொண்ட தொகுப்பும், பக்தி மேலீட்டால் ஏற்படும் பரவசத்தைக் கொட்டும் 143 பாடல்களைக் கொண்ட நாச்சியார் திருமொழியும்தான். என்னையே சரணடை என்று பகவத் கீதையில் கண்ணன் சொன்னான். அதனை வலியுறுத்தும் வகையில் ` பறை தருவான்’ என்று அறுதியிட்டு கூறியே தனது படைப்புகளைத் தொடங்குகிறாள்.

அவளது பாடல்கள் தெய்வீகத்தன்மை கொண்டவை என நம்பப்படுவதால், மழை வேண்டி பாடப்படும் ஆழிமழைக் கண்ணா என்ற திருப்பாவைப் பாடல் இன்றும் கோடைக் காலங்களில் பாடப்படுகிறது. தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் ஆந்திரத் திருமலையில் திருக்கல்யாண உற்சவத்தின்பொழுது, ஆண்டாளின் வாரண மாயிரம் என்ற தமிழ் பாசுரம் பாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**வைணவத்தாரோ வேற்று மதத்தினரோ, அன்றி இறை நம்பிக்கை அற்றவரே ஆயினும், கோதையின் தீஞ்சுவைத் தமிழுக்கு அடிமையாகாது இருத்தல் அரிது. திருப்பாவைப் பாடல்கள் அவற்றைப் படிக்கையிலேயே சித்திரப் பண்பு பெறுகின்ற பேரானந்தம் அளிப்பவை**



## திருப்பாவை சிறப்பு

வைணவ சமய வழிபாட்டில் ஒன்றறக் கலந்து விட்ட ஒன்று திருப்பாவையாகும். மாத வனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதக் காலைகளில் அனைத்து வைணவக் கோயில் களிலும் இசைக்கப்படுவதே இதன் பெரும் சிறப்பு. தமிழில் புனையப்பெற்ற பாடல்களே ஆயினும், தமிழறியா அடியார்கள் கொண்ட வைணவத் தலங்களிலும், மார்கழி மாதக் காலைகளில் திருப்பாவை இசைக்கப் படுவதும், இந்தியாவில் எங்கெல்லாம் பெருமானின் திருக்கோயில்கள் உள்ளனவோ அங்கெல்லாம், கோதை தனக்கும் ஒரு தனிச் சந்நதி கொண்டுள்ளதும் வேறு எந்த ஒரு அடியவருக்கும் காணப் பெறாத தனிச் சிறப்பாகும். மொழி வேறுபாடின்றி, வைகுந்த நாதனின் வழிபாட்டில் இந்தியக் கண்டம் முழுவதும் விரவிக் காணப்படுவது திருப் பாவைத் தொழுகை.

திருப்பாவையின் சிறப்பு முதன்மையாக அதன் பக்திப் பெருக்கு மட்டுமல்ல. பாற்கோவை முழுதும் விரவிக் கிடக்கும் கோதை மாதவன் பாற்கொண்ட தூய காதலமுதம் மற்றும் அதன் விளைவாய் அடியவருக்கும் அனைவருக்கும் அரும்பெரும் வரமாகக் கிடைத்த தமிழ் மணம்.

திருப்பாவையின் இந்த முச்சுவையும் தித்திக்கும் பாக்களில் இரண்டொன்றைக் கீழே காணலாம்:

கோதை நமக்கு அளிக்கும் பக்திச் சுவையைக் காணலாம். ஒரே அடிகொண்டு உலகையே அளந்த பரந்தாமனின் புகழைப் பாடுவதனாலேயே புவியோர் தமது துன்பம் நீங்கி இன்புற்றிருக்க இயலும் என இப்பாடலின் மூலம் இயம்புகிறாள் கோதை:

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்கு சாற்றுநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்குபெரும் செந்நெல் ஊடு கயலுளக
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

வைணவத் தத்துவ இயல்பின்படி, எம்பெருமானைச் சென்றடைய வழி அவனுடைய திருவடிகளில் சரணாகதியாவதேயாகும். இதனைப் பக்தியாலும் மேற்கொள்ளலாம்; அன்றி கிருஷ்ணப் பிரேமை என்னும் காதலாலும் அடையலாம் என்று சான்றளித்தவள் கோதை. குன்றெடுத்த கோபாலன் ஒருவனே ஆண்மகன்; அவனது அடியார் அனைவரும் அவனது காதலில் கட்டுண்ட பெண்டிரே என்பதே கிருஷ்ணப் பிரேமை. இதனை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்துகிறது பின்வரும் திருப்பாவை:

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டிலின்மேல்
மெத்த பஞ்சசயனத்தின் மேல் ஏறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா...."

வைணவத்தாரோ வேற்று மதத்தினரோ, அன்றி இறை நம்பிக்கை அற்றவரே ஆயினும், கோதையின் தீஞ்சுவைத் தமிழுக்கு அடிமையாகாது இருத்தல் அரிது. திருப்பாவைப் பாடல்கள் அவற்றைப் படிக்கையிலேயே சித்திரப் பண்பு (picturesque quality) பெறுகின்ற பேரானந்தம் அளிப்பவை. இதற்கு எடுத்துக் காட்டாக, மழையைப் பற்றிய இப்பாடலைப் படிக்கையில், வானின்றும் மண்ணில் வீழும் மழையை நேராகவே காண்பது போன்ற ஒரு அனுபவம் பெறலாம்:

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழிஉள் புக்கு முகந்துகொடு ஆர்த்துஏறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழிய்அம் தோளுடைப் பத்பநாபன் கையில்
ஆழி போல்மின்னி வலம்புரி போல்
நின்றுஅதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

உங்கள் ஆன்மீக ஜோதிட ஆசான்
மு.கிருஷ்ண மோகன்
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
ஆத்தூர் 8526223399





# பழநி
## பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம்



தைப்பூசத்தையொட்டி, பழநிக்கு பாதயாத்திரை வரும் பக்தர்களுக்காக, ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் சன்னதி அருகே, எல். என். திருமண மண்டபத்தில், 'பழநிமுருகன் அன்னதானக் குடில்' அமைக்கப்பட்டுள்ளது.

சென்னையை சேர்ந்த, சிறுவாபுரி முருகன் புகழ்பாடும், அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழு, ஒன்பதாம் ஆண்டாக இந்த குடிலை, அமைத்துள்ளது.

**ஜனவரி, 18ம் தேதி** மாலையில் பக்தி இன்னிசை, கூட்டு வழிபாடுடன் அன்னதானம் துவங்குகிறது.

**19ம் தேதி** காலை, 9:00 மணிக்கு மஹா சக்தி வேல்பூஜை வேல் மாறல் பாராயணம் நடக்கிறது.

பக்தர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவ முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அன்னதானத்தில் பங்கேற்க விரும்புபவர்கள், சேவையாற்ற விரும்புபவர்கள்,

**தொடர்புக்கு: 099443 09719 / 098421 98889**



# இந்து உப்பு

## பல்வேறு பிரச்சனைகளை எளிதாக தீர்த்து வைக்கும் அற்புதமான மருந்து

தற்சமயம் மிக வேகமாக பரவிவரும் மருத்துவ சொல் கிட்னி சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும். இந்த வகையில் செயலிழந்த கிட்னியை இரண்டே வாரத்தில் சரிசெய்ய உதவும் அற்புதமான மருந்து நம் இயற்கை மருத்துவத்தில் உள்ளது.

தற்பொழுது எல்லாம் கிட்னி பழுது அடைந்தால் டயாலிசிஸ் என்று ரத்தம் மாற்றுகிறார்கள், அதிக சிரமம் மற்றும் செலவு creatinine level 0.6 to 1.3 இருக்க வேண்டும்.

அப்படி இந்த level இல் இல்லை என்றால் கிட்னி failure, function சரியில்லை, ரத்தம் மாற்ற வேண்டும், கிட்னி மாற்ற வேண்டும் என்பார்கள், பல லட்சம் செலவு ஆகும், வேதனை வலி இருக்கும் இதை சரி செய்ய எளிய வழி உண்டு.

நாட்டு மருந்து கடைக்கு சென்று இந்து உப்பு என்று கேளுங்கள் கிடைக்கும், ஒரு கிலோ 60 ருபாய் மட்டுமே அல்லது 80 ருபாய் இந்த உப்பை கொண்டு வீட்டில் மூன்று வேளையும் உணவு சமைத்து சாப்பிடுங்கள், 15 நாட்கள் அல்லது அதிக பட்சம் 30 நாளில் உங்கள் கிட்னி இயல்பு நிலைக்கு திரும்பும்,



அதன் பிறகு நீங்கள் creatinine level சோதனை செய்து பாருங்கள் சரியான அளவில் இருக்கும்.

இந்த உப்பை கொண்டு சமைத்த உணவை யார் வேண்டுமானாலும் சாப்பிடலாம், ஒரு வயது குழந்தை முதல் முதியவர் வரை சாப்பிடலாம்.

### இந்து உப்பு என்றால் என்ன?

இமாலய மழை பகுதியில் பாறைகளை வெட்டி எடுக்க படும் உப்பே இந்து உப்பு இதை ஹிந்துஸ்தான் உப்பு (himaalayan rock salt) என்பார்கள். உடலுக்கு தேவையான 80 மினரல் இந்த உப்பில் உள்ளது.

### இந்த உப்பு வேற எந்த நோய்க்கு கேட்கும்?

Thyroid பிரச்சனைக்கு கேட்கும், வாய் கொப்பளித்தால் பல் ஈறுகள் பிரச்சனை வாய் புண் ஆகியவை கேட்கும் அல்சர் piles வந்தால் பச்சை மிளகாய் தவிர்த்து வர மிளகாய் சேர்ப்பது போல, சாதா உப்பை தவிர்த்து இந்து உப்பு சேருங்கள் கிட்னி இயல்பு நிலைக்கு திரும்பும்.

பல்வேறு ஆயுர்வேத நூல்களில் இந்துப்பு பற்றி மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

எத்தனையோ இந்திய மருத்துவ முறைகள் வெளிநாட்டு வியாபார மோகத்தால் மறைக்கப்பட்டுள்ளது. அந்த வரிசையில் இந்துப்பும் மறைக்கப்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு வேப்பங்குச்சியையும், ஆலங்குச்சியையும், கரியையும் பயன்படுத்தி, பற்களை ஆரோக்கியமாக வைத்திருந்த நம்மை கிண்டல் செய்து பேஸ்ட் விளம்பரம் செய்த பல நிறுவனங்கள் தற்போது “உங்க பேஸ்ட்ல உப்பு இருக்கா, கரி, இருக்கா”ன்னு நம்மையே கேள்வி கேட்டு பேஸ்ட்டை நம்மிடம் விற்பதைப் போன்று....

இன்று இந்துப்பு மறைக்கப்பட்டு வருகிறது.

**இந்த இந்துப்பை பயன்படுத்துவதால் ஏற்படும் பயன்கள் சிலவற்றை பார்ப்போம்.**

1. இந்துப்பு சிறிதளவு சுவையுடையது.
2. ஆண்மையை வளர்ப்பது.
3. மனதிற்கு நல்லது..

4.வாதம், பித்தம், கபம் மூன்றையும் போக்க வல்லது, இலேசானது.

5.சிறிதளவு உஷ்ணமுள்ளது.

6.கடலுப்பை உண்ணும் போது அது முடிவில் இனிப்பாக மாறிவிடும். அது விரைவில் சீரணமாகாது.

ஆனால் இந்துப்பு இதற்கு நேர்மாறானது. கடலுப்பினால் ஏற்படும் கெடுதலைக்கூட தடுத்து விடும். எனவே நீங்கள் இந்துப்பு வாங்கி உணவில் சேர்த்து பயன்படுத்துங்கள்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com





## வருடந்தோறும் திருவிழா

## கடல் மண், சந்தனத்தை ஏற்கும் சிவன்

# சிவனே முருகனாகும் அற்புதம்

இந்தியாவில் உள்ள சிவ ஆலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பினைப் பெற்று திகழ்கின்றது. அந்தவகையில் கடல், தெப்பக் குளம், கருவறை லிங்கம் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ள புண்ணியத் தலமாக விளங்குவது உவரி சிவன் கோவிலாகும்.

உவரி சுயம்புலிங்க சுவாமி திருக்கோவில், நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து கிழக்கே 25 கிலோமீட்டர் தூரத்திலும், திருச்செந்தூரில் இருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில் 35 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது.

இத்தலத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளன. அற்புதமான கடற்கரையோரம் அமைந்துள்ள சிவபெருமானுக்கு கடல் மண்ணை வேண்டுதலாக கொடுத்தால் பல்வேறு நன்மைகளை வழங்கி வருகிறார். கடல் மண்ணை சுமந்து வந்து கோயிலுக்கு அருகில் வேண்டுதலாக கொட்டினாலே மக்களின் பிரச்சனைகளை எளிதாக தீர்த்து வைக்கிறார். சந்தனத்தை கொடுத்தாலும் ஏற்றுக்கொண்டு பாவங்களை போக்குகிறார். மண்ணாக இருந்தாலும், சந்தனமாக இருந்தாலும் பாரபட்சமின்றி ஏற்றுக் கொண்டு மக்களை மகிழ்விக்கும் உவரி சுயம்பு லிங்க சுவாமி திருக்கோவில் பற்றி பார்ப்போம்.

முன்னொரு காலத்தில் உவரி, மணல் குன்றுகள் நிறைந்த பகுதியாக இருந்தது. கடம்பக் கொடிகள் அதிகமாக வளர்ந்து இருந்ததால் ‘கடம்பவனம்’ என்றும் அழைக்கப்பட்டது.

இந்தப்பகுதியில் வாழ்ந்த கோனார்குல பெண் ஒருவர் பால் வியாபாரத்திற்காக சென்ற போது, கடம்பக்கொடி காலில் பட்டு பால் சிந்தியது.

இவ்வாறு பலநாட்கள் ஒரே இடத்தில் பால் சிந்தியது. இதை அறிந்த அந்தப்பெண்ணின் கணவர் ஆவேசப்பட்டு கடம்பக்கொடியை புதர் என நினைத்து வெட்டினார். அப்போது அதிசயமாக கடம்பக்கொடியில் இருந்து ரத்தம் பீறிட்டு வந்தது.

இதனால் செய்வதறியாது திகைத்த அவர், இதுபற்றி ஊர் பெரியவரிடம் கூறினார். இது







# வித்தியாசமான வேண்டுதல்

விசாகத்திற்கு வரும் மக்கள் விசாகத்தன்று அதிகாலையில் கடலில் நீராடி, சிறிய பெட்டிகளில் கடல் மண்ணை சுமந்து வந்து சுயம்பு நாதர் ஆலயத்தின் அருகில் அம்மணலை குவிப்பார்கள். இதனால் பாவ வினைகளும், நோய்களும், கஷ்டங்களும் மணலைப்போன்று சிதறி ஓடிவிடுவதாக கருதுகின்றனர், மேலும் செல்வம் சேரும், புகழ் சேரும், கல்வி அறிவு அதிகரிக்கும், நினைத்த காரியங்கள் வெற்றி அடையும்.

மண் சுமந்து வேண்டிக்கொண்டவர்களுக்கு சுயம்புலிங்கத்தின் அருள் என்றும் நிலைத்து நிற்கும் என்று நம்புகின்றனர். கடல் குளித்த பின் விநாயகரை வழிபட்டு மும்முறை வலம் வந்து, சுயம்பு நாதர் ஆலயத்தை சுற்றி வந்து வணங்கி, பிரம்மசக்தியம்மன், இசக்கியம்மாள் ஆலயங்களை வலம் வந்து சாஸ்த்தாவை வழிபடுவார்கள்.

தெப்பக்குளம் அல்லது கிணற்று நீரில் நீராடி தூய ஆடை அணிந்து சுயம்பு நாதர் ஆயலத்தினுள் சென்று மூலஸ்தானத்தை மூன்று முறை வலம் வந்து அர்ச்சனை செய்து கொடி மரத்தைத் தொழுது பிரார்த்தனை செய்வார்கள். குமரி மாவட்ட மக்கள் உவரியில் தங்குவதற்கும், சமையல் செய்து பரிமாறுவதற்கும், பாதுகாப்பிற்காகவும் மடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுவாமியின் அற்புத லீலைகளால் சுவாமியின் பெருமை நாடெங்கும் பரவியது. கோவிலுக்கு வரும் பக்தர்களின் கூட்டமும் அதிகரித்தது.

குறித்து தகவல் அறிந்ததும் மக்கள் கூட்டம், கூட்டமாக அந்த பகுதிக்கு வந்து பார்த்தனர்.

அனைவரும் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து நின்றனர்.

இறைவனும் அசரீராக தான் இந்த இடத்தில் குடிகொண்டிருப்பதாகவும், தனக்கு கோயில் கட்டி வழிபாடு நடத்தும் படியும் சுட்டிக்காட்டினார்.

அப்போது ஊர் பெரியவர், சுவாமியின் அருளால் அருள்வாக்கு கூறினார்.

ரத்தம் வடியும் இடத்தில் சந்தனத்தை அரைத்துப் பூசினால் ரத்தம் வடிவது நின்று விடும் எனக்கூறி, அந்த வனப்பகுதியில் சந்தனமரம் இருக்கும் இடத்தின் அடையாளத்தையும் கூறினார்.

அவர் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து சென்ற மக்கள், அங்கு சந்தன மரம் இருப்பதை பார்த்து வியப்படைந்தனர்.

பின்னர் சந்தன மரத்தின் கொம்பை எடுத்து அரைத்து சந்தனத்தை ரத்தம் வந்த இடத்தில் பூசினார்கள். சந்தனத்தைப் பூசியதும் ரத்தம் நின்று விட்டது.

உலகை காக்கும் பரம்பொருளான பரமேஸ்வரன் லிங்க வடிவில் சுயம்புலிங்கமாக எழுந்தருளினார். மக்கள் ஓலையால் கூரை வேய்ந்து கோவில் எழுப்பினார்கள்.

சுயம்புலிங்க சுவாமிக்கு பால் அபிஷேகமும், நான்கு வேளை பூஜையும் செய்து வணங்கினர்.

உவரி சுயம்புலிங்க சுவாமியின் மேல் சந்தனத்தை பூசி ரத்தத்தை நிறுத்திய காரணத்தால் அவரை வழிபட வரும் பக்தர்களுக்கும் சந்தனத்தை மேனி எங்கும் பூசுவதற்கு கொடுக்கின்றனர்.

சுவாமியின் திருமேனியில் தினமும் சந்தனத்தை அரைத்து பூசுகின்றனர். தீராத நோய் உள்ளவர்களும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களும் சந்தனத்தை மருந்தாக்கி நலம் பெறுகின்றனர்.

சந்தனம், விபூதியை தண்ணீரில் கலந்து அருந்துகிறார்கள்.

தொடர்ந்து 41 நாள் கடலில் நீராடி இத்தலத்து சிவபெருமானை வணங்கிவந்தால் எப்பேர்பட்ட நோய்களும் நீங்குவதாக ஐதீகம் உள்ளது. சித்த பிரம்மை, பில்லி, சூன்யம், பகை, போன்ற கொடிய செயல்களும் மேற்சொன்ன 41 நாள் நீராடலில் விலகி ஓடிவிடுகிறது.

இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக உள்ளார். மார்கழி மாதம் முழுக்க காலை 7 மணிக்கு சூரிய ஒளி சுவாமி மீது விழுகிறது. சுவாமியின் அபிஷேகத்துத் தண்ணீர் எடுக்கப்படும் 4 நன்னீர் ஊற்றுகளும் கடல் ஓரத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறுகிறது. இதில் தைப் பூசம் அன்று கொடியேற்றப்பட்டு 10 நாள் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

வைகாசி விசாக திருவிழாவின் போது சுவாமி அன்பே சிவமாக, சிவமே முருகப்பெருமானாக காட்சி கொடுப்பார். இந்த விழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. தை அமாவாசை, மாசி சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரைவிசு, வருஷாபிஷேகம், ஆடி அமாவாசை, பிரம்மசக்தி அம்பாள் கொடைவிழா,தீர்த்தவாரி, நவராத்திரி கொலு, விஜயதசமி, ஐப்பசி விசு, திருக்கார்த்திகை தீபம், திருவாதிரை போன்ற விழாக்களும் சிறப்பாக கொண்டாடப்படும்.

சுவாமியின் உடனுறை சக்தி பிரம்மசக்தி ஆவார். கோவில் வளாகத்தில் பரிவார தேவதைகளான முன்னோடி சுவாமி, இசக்கி அம்மன், பேச்சி அம்மன், மாடசாமி ஆகியோருக்கும் சன்னிதிகள் உள்ளன. விநாயகர் கோவிலுக்கு மேற்கு பகுதியில் பிரசித்திப் பெற்ற வன்னிய சாஸ்தா கோவில் உள்ளது.

உவரி கோவிலில் காலை 6 மணிக்கு உதய மார்த்தாண்டம், பகல் 11.30 மணிக்கு உச்சிக் காலம், இரவு 7 மணிக்கு சாயரட்சை, 8.30 மணிக்கு அர்த்தஜாம பூஜை நடைபெறும். மார்கழி மாதத்தில் அதிகாலை 3.30 மணிக்கு நடை திறக்கப்படும்.

# இறைவனின் நோக்கமும் பூஜ்ய குருதேவரின் அவதாரமும்

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் வடகிழக்கு இந்தியாவில் இமயமலைக்கு அருகிலுள்ள கோரக்பூரில் 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி, மகாவதார பாபாஜியின் சீடரான ஸ்ரீ ஸ்ரீ லாஹிரி மகாசயருக்குச் சீடர்களாக இருந்த, தெய்வத்தன்மையுடைய பகவதி சரண் கோஷ் க்கும் ஞான பிரபா கோஷ் க்கும் நான்காவது குழந்தையாக அவதரித்தார். பெற்றோர் அவருக்கு சூட்டிய பெயர் முகுந்தலால் கோஷ்.

பூஜ்ய குருதேவரைப்பற்றியும், மனிதர்களிடம் அவர் கொண்டுள்ள பிரேமையினால் அவர்களுக்காக குருதேவர் செய்துள்ள மிகப்பெரிய சாதனைகளைப் பற்றியும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியான என்னுடைய முதல் ஆர்ட்டிக்களிலும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியான ஆன்மீக மலர் ஆர்ட்டிக்களிலும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இருப்பினும் தற்போது அவருடைய பிறந்த நாளை முன்னிட்டு அவரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.



குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் இறைவனின் அருளாலும் அவருடைய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரியின் அருளாலும் இறைவனின் குழந்தைகளாகின்ற மனித ஆத்மாக்களை அவனுடன் சேர்ப்பதற்காக, அதாவது, இறைவனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை அடைவதற்காக, 1917 ஆம் ஆண்டில் 'யோகதா, சத் சங்க சொஸைடி ஆஃப் இந்தியா' என்னும் பெய ரில் ஜார்கண்ட் மாநிலத்தின் தலைநகரமான ராஞ்சியில் தியான ஆலயம் நிறுவினார்.

அதன் தலைமையகம் கொல்கட்டாவிலுள்ள தக்ஷிணேஸ்வர்ல் உள்ளது. இறைவனின் அன்புக் கட்டளைக்கிணங்க, மகாவதார பாபாஜியின் வழி காட்டுதலில் பரமஹம்ஸர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரியால் 1920 ஆம் ஆண்டில் சர்வதேச மிதவாதிகளின் மகா சபைக்கு இந்திய பிரதிநிதியாக அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். "ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப்" என்ற பெயரிலுள்ள அவருடைய ஸ்தாபனத்தின் சர்வதேச தலைமையகத்தை லாஸ் ஏஞ்ஜலீஸில் 1925 ம் ஆண்டில் நிறுவினார், மேலே கூறப்பட்டுள்ள ஸ்தாபனம் இன்றைக்கு உலகம் முழுவதும் இயங்கிவருகிறது.

இந்தியாவில் இன்றைக்கு டில்லியிலும் இமைய மலையில் உள்ள 'த்வாரஹாட்' என்ற இடத்திலும் யோகதா சத் சங்க ஆசிரமங்கள் இயங்கிவருகின்றன. இன்றைக்கு இந்தியாவில் மொத்தம் நான்கு ஆசிரமங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஸ்தாபனத்தின் கிளைகளான தியான கேந்த்ரா உள்பட 250க்கும் மேற்பட்ட தியான மண்டலிகள் இயங்கி வருகின்றன. 2010–ம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள மண்ணூர் என்ற இடத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் ஓர் ஆசிரமம் 'ரிட்ரீட் செண்டர்' என்ற பெயரில் இயங்கி வருகின்றது. சுருங்கச் சொன்னால் இன்றைக்கு இந்தியாவில் ' யோகதா சத் சங்க சொஸைடி ஆஃப் இந்தியா' என்ற பெயரிலும் வெளிநாடுகள் முழுவதும் 'ஸெல்ஃப்ரியலைசேஷன் ஃபெலோஷிப்' என்ற பெயரிலும் ஆசிரமங்களும் மண்டலிகளும் தியான ஆலயங்களாக இயங்கி வருகின்றன. மனிதர்களின் இதயங்களில் இறைவனின் ஆலயத்தை நிர்மாணிப்பதன் பொருட்டு குருதேவர் அயராது உழைத்ததன் பலன்தான் மேலே கூறியுள்ள இயக்கங்கள் உருவாகி, அதனால் பலலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

இவ்வுலகம் தற்போது, இறைவனையும் அவன் அருளையும் மறந்தவண்ணம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் இறை அருளையும் இறை அனுபூதியையும் அனைவரும் பெறவேண்டும் என்பதற்காகவும், தற்போது ஒளிர்ந்து விளங்கிக் கொண்டிருக்கும் இறைவனின்புனித 'யோகதா' பாதையை அனைவரும் கண்டறிந்து, அம்மார்க்கத்தின் மூலம், இறைவன் தன் குழந்தைகளை தன்னுடன் சேர்ப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யவும், பணத்திற்காகவும் பொருளுக்காகவும் பெண்ணுக்காகவும் பொன்னான நேரத்தை விரையம் செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் தன் குழந்தைகளின் சிந்தனையை தன்பக்கம் திரும்பச் செய்து, தம் ஆத்மாவைப் பற்றிய உண்மையைப் உணர வைத்து, தம் சொந்த வீடாகின்ற இறைவனின் சாம்ராஜியத்திற்கு அனைவரும் திரும்பவேண்டும் என்பதே அன்புத்தந்தை இறைவனின் நோக்கமாகும். இறை அனுபூதி பெற்றாலொழிய சொந்த வீட் டிற்குச் செல்ல இயலாது. அதற்காகத்தான் இறைவனிடத்திலிருந்து பெயர்ந்து வந்த, இறைவனின் அவதாரமான ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் இறைவனின் திருவுள்ளம் கனிந்து பூமியில் அவதரித்தார். அதற்கேற்ப, குருதேவர் தன்னுடைய வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணித்து அதை மக்களுக்காகப் பயன்படுத்தி, இறைவனின் குழந்தைகளை அவனுடன் இணைப்பதற்காக, ஏராளமான, மகத்தான போதனைகளை அருளியுள்ளார். அந்த போதனைகளில் சிலவற்றை இந்த ஆர்டிக்களிலும் தரப்பட்டுள்ளன. பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்.

பரித்ராணாய சாதூனாம் வினாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாயா ஸம்பவாமி யுகே யுகே:

"தர்மம் நசிந்து, அதர்மம் பெருகும் போது, நல்லவர்களைக் காத்து ரட்சிப்பதற்கும் தீயவர்களை அழிப்பதற்கும் யுகங்கள்தோறும் நான் அவதரிப்பேன்." (பகவத் கீதா அத்.4 ஸ்லோகம் 8) அதுபோலவே இறைவனின் குழந்தைகளாகின்ற மனிதர்கள், தாம் ஆன்மா என்பதை மறந்து, அறிவின்மையால் உலகப் பொருட்களை நாடிச்செல்ல ஆரம்பிக்கும்போது, மகான்கள் அவர்களை மீட்டு இறைவனிடம் சேர்ப்பதற்காக அவதரிக்கின்றனர். மாயையின் ஆதிக்கத்தால் உலகப்பொருட்கள்மேல் மனம் மயங்கி உலக வாழ்க்கையில் அதிக ஈடுபாடுகொண்டு இறைவனை மறக்கின்ற, இறைத்தன்மையை உணரக்கூடிய இறைவனின் பிரதிபிம்பங்களாகின்ற மனிதர்களை இறைவன் பக்கம் திரும்பச் செய்வதற்காக ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரும் அவதரித்துள்ளார். இறைவன், தன் குழந்தைகளான மனிதர்களைக் காப்பாற்றுவதற்காகவே பூஜ்ய குருதேவரை பூமிக்கு அனுப்பியுள்ளார். இதுவே இறைவனின் நோக்கமும் விருப்பமும்.

குருதேவரின் போதனை கள் கீழ்கண்டவாறு உள்ளன.

49
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

இறைவனின் இருப்பின் உணர்வுதான் மகிழ்ச்சியின் இரகசியம்.

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: “வாழ்க்கையை அனுபவிப்பது சரிதான்; மகிழ்ச்சியின் இரகசியம் என்னவென்றால் எதனிடமும் பற்று கொள்ளாமல் இருப்பதாகும் மலரின் வாசத்தை அனுப வியுங்கள், ஆனால் அதில் இறைவனைப் பாருங்கள். புலன்களைப் பயன்படுத்தி, இறைவனை நாம் எப்பொழுதும் பார்க்கலாம், அவனைப்பற்றி எப்பொழுதும் நினைக்கலாம் என்பதற்காக மட்டுமே நான் அவைகளின் உணர்வு நிலையை வைத்துக்கொண்டுள்ளேன்.” என் கண்கள் நின்னழகை எல்லாயிடத்திலும் காண்பதற்காகவே படைக்கப்பட்டுள்ளன. என் காதுகள் எங்கும் நிறைந்துள்ள என் குரலைக் கேட்பதற்காகவே படைக்கப்பட்டுள்ளன. ” அதுதான் யோகம், இறைவனுடன் ஒன்றுதல். அவனைக் காணக் காட்டிற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. உலகப் பழக்கங்கள் நம்மை அவைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளும்வரை, நாம் எங்கிருந்தாலும் நம்மை இறுகப் பற்றிக் கொண்டிருக்கும். யோகியானவன் தன் இதயக் குகையில் இறைவனைக் காணக் கற்கிறான். அவன் எங்கு சென்றாலும், தன்னுடன் இறைவனின் இருப்பாகிய ஆனந்தமயமான உணர்வினை எடுத்துக்கொள்கிறான்.

மனிதன் அழியும் மனிதப்புலன் உணர்வு நிலைக்குள் இறங்கியது மட்டுமல்லாமல், அந்தப்புலன் உணர்வு நிலையின் பேராசை, கோபம், பொறாமை ஆகிய ஒழுங்கீனங்களால் கட்டப்பட்டுள்ளான். இறைவனைக் காண்பதற்காக மனிதன் இந்த ஒழுங்கீனங்களை விரட்ட வேண்டும். கீழை நாட்டவர் மற்றும் மேலை நாட்டவர் ஆகிய இரு சாரருமே புலன் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டும். ஒரு சாதாரண மனிதன் காலைக் காபி தனக்குத் தரடப்படவில்லை என்பதாலும் மேலும் இந்த இழப்பு தனக்கு தலைவலியைத் தரும் என நிச்சயமாக இருப்பதாலும், அவன் கோபப்படலாம். அவன் தன்னுடைய பழக்கங்களின் அடிமை; முன்னேறிய யோகி சுதந்திரமானவன்.

யோகப்பயிற்சி, சுதந்திரத்திற்கு அழைத்துச் செல்கிறது. சில யோகிகள் இப்பற்றின்மைக் கருத்தை உச்ச நிலைகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அவர்கள், ஒருவர் முள் படுக்கையில் எந்த வித அசௌகரியமுமின்றி படுக்கும் ஆற்றல் உடையவனாய் இருக்க வேண்டும் என்றும், இதர உடற்கட்டுப்பாட்டுத் தவமுறைகளையும் போதிக்கின்றனர். ஒரு முள்படுக்கையில் அமர்ந்து இறைவனை நினைக்க முடிபவன், மனதின் பெரும் வலிமையைக் காட்டுகிறான் என்பது உண்மையே. ஆனால் இந்த மாதிரியான வித்தைகள் அவசியமில்லை. ஒருவர் வசதியான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டுகூட இறைவனைப்பற்றித் தியானிக்கலாம்.

பதஞ்சலி, முதுகுத்தண்டுவடத்தை நேராக வைக்கும் எந்த தேக நிலையும் தியானத்திற்கு, இறைவன் மீதான யோக மன ஒருமுகப்பாட்டிற்கு ஏற்றது எனக்கூறுகிறார். தேகத்தை வளைத்து நெளித்தல், அல்லது ஹதயோகத்தில் கூறியுள்ளபடி அசாதாரண தேக சகிப்புத் தன்மை மற்றும் வளையும் தன்மையைக் கோரும் தேகப்பயிற்சிகள் தேவையில்லை, இறைவன்தான் இலக்கு; அவனுடைய இருப்பைப்பற்றிய உணர்வை நாட நாம் முயன்று உழைக்க வேண்டும், பகவத் கீதை கூறுகிறது. ” எவன் பக்தியினால் தனது ஆத்மாவை என்பால் ஆழ்த்தி, என்னிடம் லயித்து விட்டானோ அவனை, எல்லாவிதமான யோகியர்களிலும் தலைசிறந்த சமநிலையுடையவனாகக் கருதுகிறேன்.” (பகவத் கீதை அத். 6 ஸ்லோகம் 47)

மிதமிஞ்சிய வெப்பத்தையும் குளிரையும் கொசுக்கள் மற்றும் இதர தொல்லை தரும் பூச்சிகள் ஆகியவற்றினை பொருட்படுத்தாத நிலையையும் மெய்ப்பித்துக் காட்டியதற்கு இந்த யோகிகள் பெயர் போனவர்கள். ஒரு யோகியாக இருப்பதற்கு இவ்வாறு மெய்ப்பித்துக் காட்டுதல் என்பது அவசியமில்லை என்றாலும், அது ஒரு யோக வல்லுனரின் இயற்கையான சாதனை. தொல்லை தரும் பொருட்களை நீக்க முயற்சி செய்யுங்கள்; அல்லது தேவைப்படின் அவைகளை சகித்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். அதே சமயம் தனக்குள் நிலைகுலையாமல் இருக்க முயலுங்கள். ஒருவர் சுத்தமாக இருக்க முடியுமானால், அசுத்தமாக இருப்பதில் அர்த்தமே இல்லை. ஒருவர் அரண்மனையில் வசிப்பதில் பற்று கொள்ளலாம். குடிசையில் வசிப்பதிலும் கூட பற்று கொள்ளலாம்.

ஒரு யோகியாக வேண்டுமானால், தியானம் செய்ய வேண்டும். யோகியானவன் ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன், தனது தேகத்திற்கான உணவைப்பற்றி முதலில் எண்ணுவதில்லை; அவன் தனது ஆன்மாவிற்கு இறைத்தொடர்பு என்ற அமிர்தத்தால் உணவளிக்கிறான். தனது ஆழ்ந்து மூழ்கும் தியான மனதின் மூலமாகக் கண்ட ஊக்கத்தினால் நிரப்பப்பட்டு அவனால் எல்லா தினசரிக்கடமைகளையும் மகிழ்ச்சியுடன் செய்ய முடிகிறது.

இறைவன் இந்தப்பூமியை உள்ளபடி, காரணத்துடன் படைத்துள்ளான். அவனது திட்டத்தில் மனிதனின் பங்கானது, உலகத்தை மேலும் மேன்மையுறச்செய்வதாகும். மேலை நாட்டவன் புதிய மற்றும் செம்மைப்பட்ட உலக வசதிகளைப் பெறுவதற்கென தன்னை இடைவிடாமல் மும்முரமாக்கிக் கொள்வதில் உச்ச நிலைகளுக்குப் போக முற்படுகிறான். கீழை நாட்டவர் தன்னிடம் உள்ளதே போதும் என்று திருப்தி அடைந்திருப்பதில் உச்ச நிலைகளுக்குப் போக நாட்டம் கொள்கிறான். மேலை நாட்டு ”மேலே தொடர்ந்து செல்” என்ற முன்னேற்ற மனப்பாங்கு மற்றும் கீழைநாட்டு எளிதான, அமைதியான மனப்பாங்கு ஆகிய இரண்டிலுமே மனதைக் கவரும் ஏதோ உள்ளது. நாம் இரண்டிற்கும் நடுவில் சமநிலையான பாதையை ஏற்க வேண்டும்.”

குருதேவரின் போதனைகளுக்கேற்ப பகவத் கீதை அத் 12 ஸ்லோகம் 3 மற்றும் 4ல் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்துள்ள சில விஷயங்களை கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றேன்.

ஸ்லோகம் 3 “எல்லா ‘இடங்களிலும்சமபுத்தி கொண்டவர்களும், உயிரினம் முழுவதும் நலமுடன் வாழவேண்டும் என்று விரும்புபவர்களும், அதற்காகவே பாடுபடுபவர்களுமான மனிதர்கள் தம் புலன்களை அடக்கி, எல்லாயிடங்களிலும் நிறைந்திருப்பவனும், சிந்தனைக்கு அப்பாற்பட்டவனும் அந்தர்யாமியும் சஞ்சலமில்லாதவனும், குறிப்பிட்டு விளக்க இயலாதவ னும், திட சத்திய சொரூபமாகவும் அழியாத அக்ஷர (ஓங்காரம்) சொரூபமாகவும் இருக்கின்ற இறைவன் அல்லது (நிர்குணப்ரம்மம்) எல்லா கரணங்களுக்கும் வெளிப்படாததாகும். பிரபஞ்சப் பொருட்கள் கண்ணிற்குத் தெரிந்தவை. ஆனால் மேலே கூறப்பட்டுள்ள நிர்குணப்ரம்மம் வெளிப் படாததாகும். பிரபஞ்சப்பொருட்கள் எவ்வளவு சூட்சுமமாக இருந்தாலும் அவற்றை மனதால் நினைக்க முடியும், ஆனால் நிர்குணப்ரம்மத்தை மனதால் நினைக்க இயலாது. மனம், வார்த்தை, சிந்தனை இவற்றிற்கு அப்பார்ப்பட்டது. பிரபஞ்சப் பொருட்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறாக இருக்கின்றன. அவை நிலையற்றவை. ஆனால் ப்ரம்மம் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது: நிலையானதாக உள்ளது; துருவமாக உள்ளது. இவ்வாறான பரமதத்துவமான பகவானை உபாசிப்பவர்கள் என்னை வந்தடைவர்”

ஸ்லோகம் 4 “மேலே கூறப்பட்டுள்ள நிர்குண ப்ரம்மத்தை, உபாசனையின் மூலம் அடையலாம் என்று பகவான்

ஸ்ரீ கிருஷ்ணன் கூறியுள்ளார். மேலும் அவர் அருளுகிறார்: சாதாரண மனிதர்களுக்கு இது சாத்தியமாகுமா? ஒருவன் இந்நிலையை அடைவதற்கு அவனுக்கு பலகாலம் வேண்டி வரும். கூறப்போனால், பல பிறவிகள் கூட ஆகலாம். கடின சாதனையினால்தான் இந்நிலையை கைவரப்பெறுவான் அது அவ்வளவு எளிதல்ல. ஒருவனுக்கு இந்நிலை எவ்வாறு கிடைக்குமென்றால், வேத சாஸ்திரங்களைக் கற்றறிந்து தார்மீக வாழ்க்கை வாழ்வதால் வைதீக தர்மானுஷ்டானங்கள் ஏற்படுகிறது. அவ்வாறான புண்ணிய கர்மங்கள் வளரும்போது ரஜ, தமோ குணங்கள் அடங்கி ஸத்துவகுணம் வளர்கிறது. அப்பொழுது கர்ம வாசனைகள் குறைகிறது. ’ சத்தி யத்தை’ அல்லது ’ உண்மையை ’ (இறைவனை) அறியவேண்டும் என்ற ஆசையும் அத்துடன் தத்துவ விசாரமும் அவனுக்கு ஏற்படுகிறது. அவன் இந்த உலகத்தைப் பற்றி ஒவ்வொன்றாக நினைக்கத் தொடங்குவான். அப்பொழுது ஒவ்வொரு தத்துவத்தையும் இது வேண்டாம்; அது தேவையில்லை என ஒவ்வொன்றாக ஒதுக்கித் தள்ளிவிட்டுக்கொண்டேயிருப்பான். அனைத்துலகமும் உலகப்பொருட்களும் துக்க ஸ்வரூபமானவை என்பது அவனுக்குத் தெரியவரும். அப்பொழுது சம்சார வாழ்க்கையில் உண்மையாகவே அவனுக்கு வைராக்கியம் உண்டாகும். எப்படியாவது அஜ்ஞான ஸ்வரூபமான சம்சாரத்திலிருந்து விமோசனம் கிடைக்க வேண்டும் என்ற பேராவல் அதிகரிக்கத் தொடங்கும். அந்த நேரத்தில் இறை அனுபூதி பெற்ற; இறைவனுடன் இணைந்த, இறைவனுடன் வாழுகின்ற ஒரு மகாத்மா அவனுக்கு குருவாக வருவார். எவ்வளவு சொன்னாலும் இறைவனைப்பற்றிய (நிர்குண பிரம்மத்தைப் பற்றிய) அறிவு கிடைக்கப்பெறாத தன் சீடனுக்கு கருணை வடிவமான குருதேவர் பலமுறை முயற்சித்து, பின்னர் சீடனுக்கு நிர்குண ப்ரம்மத்தை உணரச் செய்வார்.

எவ்வாறெனில் அதுவரையிலும் சீடனுக்கு, அவனுக்குள்ளேயும் வெளியேயும் பல தடைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இருப்பினும் அந்த சீடன் குருவுடன் இருப்பதால், வருபவை எந்தத் தடைகளானாலும் சரி, அவற்றை முறியடித்துவிட்டு தன் சீடனுக்கு நிர்குண பரப்ரம்மஸ்வரூபத்தை அதாவது ஓம்கார ஸ்வரூபனை உபாசிக்கக் கற்றுத் தருவார். சீடனும் உபாசிக்கத் தொடங்குவான். குரு அருளாலும் சாதனையினாலும் அந்த சீடன் சம்சாரத்தின் அனைத்து எல்லைகளையும் உடைத்து நிர்குணப்ரம்மமாகின்ற இறைவனை அறிந்து, அடைந்து என்றென்றும் முக்தனாகி விடுகிறான். அவன் இறை அனுபூதி பெறுவான் எனப்பொருள்”

பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் கூறியுள்ளதைப் பார்க்கையில், இவ்வாறான பேறு பெறுவதற்கு ஒருவன் பல பிறவிகளில் செய்துள்ள சாதனைகளும் அதே சமயம் தன்னுடைய வாழ்க்கை முறையும்தான் காரணமாகின்றன.

மனிதப்பிறவி கிடைத்த பின்னர், பிரபஞ்சத் தந்தையாகின்ற இறைவனை அடைவதே ஒருவனுடைய குறிக்கோளாக இருக்க வேண்டும்.

இறைவனை அடைய வேண்டும் என்பது பற்றிய அறிவு (விவேகம்) வந்தால் அது சாதாரண விஷயமன்று, உலக வியாபாரத்திலும் உலகப் பொருட்களிலும் மாறிமாறி மூழ்கியும் எழுந்தும் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற ஒருவன் அவற்றையெல்லாம் கைவிட்டு இறைவனைக் காணவேண்டும் என்ற பேராவம் ஏற்படுகிறது என்றால் அது யாருடைய செயலாக இருக் கும்? அது நம்முள் உறைந்திருக்கும், பேரானந்தப் பெருவெள்ளத்தை அருளுகின்ற ஆத்ம ஜோதியாகின்ற, பரம ஜோதியாகின்ற ஸாக்ஷாத் இறைவனின் செயலே ஆகும். யாருக்கு, எந்த நேரத்தில் எதை அருளவேண்டும் என்பது அவனுக்கு மட்டும்தான் தெரியும். அதற்குக் காரணமாக இருப்பது குரு தேவராவார்.

இறைவனின் பெரிய குழந்தையாகின்ற. குருதேவரை நம்மிடம் அனுப்பி வைப்பதும் மேலும் அனுப்பி வைக்கப் போவதும் இறைவனே. ஒருவனுடைய, பல பிறவிகளில் ஏற்பட்டுள்ள அனைத்து தீய கர்மங்களையும் துடைத்துவிட்டு ஜோதி ஸ்வரூபனான இறைவனிடத்தில் அவனை சேர்த்துவிடுகிறார் குருதேவர், இதுவே இறைவனுடைய நோக்கமாகும். மனித ஆன்மாக்களை சீர்திருத்துவதற்காகவும் தூய் மைப்படுத்துவதற்காகவும் குரு அவசியம் தேவை. எனவே, தன்னுடன் இணைந்த, தன்னைப்பற்றி மனிதர்களுக்கு போதனை செய்யக்கூடிய, தகுதியுடைய ஆத்மாக்களை அவ்வவ்போது பூமியில் அவதரிக்கச் செய்து, உலகத்தின் குருவாக அவர்களை பயன்படுத்துகிறான் இறைவன்.

இவ்வாறு இறைவனின் துணையாலும் அருளாலும் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர், "நிர்குணப்ரம்மத்தை உபாசித்து அடைவதற்காக நிறுவியுள்ள பாதையே, 'யோகதா' ஆகும். இந்தப்பாதையின் விதிமுறைகளைக் கடைபிடித்து வாழுகின்ற ஆத்மாக்களால், குருதேவரின் உதவியுடன் நிர்குணப்ரம்மத்தை அடைய இயலும் என்பதில் துளியும் ஐயமில்லை. இதுவே இறைவனின் நோக்கமாகும். நிர்குணபரப்பிரம்மத்தை அடைவதற்கான 'நுழைவாயில் (கேட்வே)' தான் யோகதா.

ஜெய் குரு

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909



# அலைமகளுடன் ஆந்தை



தென் நாட்டில் ஆந்தையைக் கண்டால் அலறி ஒடுகிறோம். ஆனால் வடநாட்டவர் தீபாவளி அன்று மகாலட்சுமியின் வாகனமாக ஆந்தையை அருகில் வைத்து வழிபடுகின்றனர். அன்று யார் வீட்டிலாவது ஆந்தை வந்து அமர்ந்து குரல் எழுப்பினால் லட்சுமி குபேரன் அருள் வரப்போகிறது என்று மகிழ்ச்சி அடைவார்கள். ஆந்தை கண்ணில் பட்டால் யோகம் அடிப்பதாக நம்பிக்கை நிலவுகிறது.

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
ஆன்மிகமலர்
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.
ஆன்மிகமலர் மெயில் புக்



## குழந்தை பாக்கியம் பெற

# அகத்தியர் கூறும் வழிமுறை

தற்காலத்தில் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு பல்வேறு வெளிநாட்டு மருத்துவமுறைகள் புல் பூண்டு போல் முளைத்து மக்களிடம் காசு பணத்தை கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் நமது முன்னோர் பலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதற்கு அற்புதமான தீர்வை கூறியுள்ளனர். ஆனால் நாம் அதை அறிந்து கொள்ளாமல் போலி நாகரீகத்தில் ஆட்பட்டுள்ளதால் அற்புதமான பல சூட்சும இயற்கை மருத்துவ முறைகள் மறைந்து கொண் டிருக்கின்றன. குழந்தை பேறில்லாமல் துயரத்தில் அழுந்தும் தம்பதியரின் குறை தீர்க்கும் எளிய வழி ஒன்றினை அகத்தியர் தனது "அகத்தியர் பரிபூரணம்" என்னும் நூலில் அருளியிருக்கிறார்.

இம்முறையை கையாள குருவை தியானம் செய்து கீழ்காணும் பாடலுக்குரிய வழிமுறைகளை செய்தால் மேற்கண்ட பிரச்சனை தீரும்.

இன்பமுடன் ஓம்றீங் அங்வங்கென்று
வருந்திமனக் கனிவதனால் தேனில்மைந்தா
மார்க்கமுடன் ஆயிரத்தெட்டு உருவேசெய்து
அருந்தவமாய் தலைமுழுகும் போதில்மைந்தா
அன்புடனே பெண்களுக்கு யீய்ந்தாயானால்
திருந்தியந்த மங்கையர்க்குக் கெற்பமுண்டாம்
திட்டமுடன் கண்மணியைக் காண்பார்பாரே.

❖❖❖

பாரப்பா மலடாகி இருந்தாலென்ன
பக்குவமாய் யன்பதுக்குள் கெர்ப்பமுண்டாம்
நேரப்பா மணிமந்திர மிதுதானாகும்
நேர்மையுள்ள ரகசியமது சந்தானவித்தை
ஆரப்பா அறிவார்கள் சந்தானகரணி
அறிந்துமன துரிமையனா லடக்கம்பண்ணி
சாரப்பா சாகரத்தில் தவசுபண்ணி
சதாகாலம் பூரணத்தில் சார்ந்துவாழே.

– அகத்தியர்.

வெள்ளியினால் ஆன ஒரு கிண்ணத்தில், ஒரு கழஞ்சு தேன் விட்டு அதனை வலது கையில் ஏந்திக் கொள்ள வேண்டுமாம். பின்னர் கிழக்கு முகமாய் அமர்ந்து, கிண்ணத்தில் இருக்கும் தேனை கவனக் குவிப்புடன் பார்த்துக் கொண்டே "ஓம் றீங் அங் வங்" என ஆயிரத்து எட்டு தடவைகள் தொடர்ச்சியாக செபிக்க வேண்டுமாம். இந்த செயல்முறையை குழந்தை பேறு வேண்டும் தம்பதியரில் கணவனே செய்திட வேண்டும் என்கிறார்.

இவ்வாறு செபித்த தேனை மனைவியி யானவள் மாத விலக்கு முடிந்து தலை முழுகிய பின்னர், உண்ணக் கொடுத்து இல்லறத்தில் ஈடுபட்டு வர கருத்தரிக்கும் என்கிறார் அகத்தியர். இந்த முறைக்கு எவ்விதமான பத்தியமும் கூறப் படவில்லை. மலடு என சொல்லப் பட்டவர்களுக்கும் இந்த முறையினால் கருத்தரிக்கும் என்கிறார் அகத்தியர்.

பெரும்பாலான சித்தர், முனிவர்களின் நூலில் பல்வேறு பிரச்சனைகளுக்கு மருத்துவ தீர்வை வெளிப்படையாக கொடுக்காமல், தூய தமிழில் பொருள் அறிந்து புரிந்து கொள்ளும் அளவிற்கு சற்று கடினமாக தரப்பட்டுள்ளது.

இதன் முழு பொருள் புரிந்து கொண்டால் அம் மருத்துவ முறை மிக எளிதானதாக இருக்கும். அந்த வகையில் அகத்தியர் கூறியுள்ள மிக எளிமையான வழிமுறைகயை தேவையிருப்ப வர்கள் குருவினை வணங்கி முயற்சிக்கலாம். தேவையுள் ளோருக்கு இந்த தகவலை அறியத் தரலாம்.



# ஆன்மிகமலர்.காம் வழங்கும் 2019 ஆண்டின் பிரதோஷ நாட்கள்



நமது வாசகர்களுக்காக 2019-ஆம் ஆண்டின் பிரதோஷ தினங்களை கொடுத்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| 3.1.2019 | வியாழன் | பிரதோஷம் |
| 18.1.2019 | வெள்ளி | பிரதோஷம் |
| 2.2.2019 | சனி | சனிப்பிரதோஷம் |
| 17.2.2019 | ஞாயிறு | பிரதோஷம் |
| 3.3.2019 | ஞாயிறு | பிரதோஷம் |
| 18.3.2019 | திங்கள் | சோமபிரதோஷம் |
| 2.4.2019 | செவ்வாய் | பிரதோஷம் |
| 17.4.2019 | புதன் | பிரதோஷம் |
| 2.5.2019 | வியாழன் | பிரதோஷம் |
| 16.5.2019 | வியாழன் | பிரதோஷம் |
| 31.5.2019 | வெள்ளி | பிரதோஷம் |
| 14.6.2019 | வெள்ளி | பிரதோஷம் |
| 30.6.2019 | ஞாயிறு | பிரதோஷம் |
| 14.7.2019 | ஞாயிறு | பிரதோஷம் |
| 29.7.2019 | திங்கள் | சோமபிரதோஷம் |
| 12.8.2019 | திங்கள் | சோமபிரதோஷம் |
| 28.8.2019 | புதன் | பிரதோஷம் |
| 11.9.2019 | புதன் | பிரதோஷம் |
| 26.9.2019 | வியாழன் | பிரதோஷம் |
| 11.10.2019 | வெள்ளி | பிரதோஷம் |
| 25.10.2019 | வெள்ளி | பிரதோஷம் |
| 9.11.2019 | சனி | சனிப்பிரதோஷம் |
| 24.11.2019 | ஞாயிறு | பிரதோஷம் |
| 9.12.2019 | திங்கள் | சோமபிரதோஷம் |
| 23.12.2019 | திங்கள் | சோமபிரதோஷம் |

## ஆன்மிகமலர்.காம் வழங்கும் 2019 ஆண்டின் விசேஷ நாட்கள்

| | அமாவாசை | பௌர்ணமி | கிருத்திகை | சங்கடஹர சதுர்த்தி | சஷ்டி | ஏகாதசி | சிவராத்திரி |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 5 | 29 | 16 | 24 | 12 | 1, 17, 31 | 4 |
| பிப்ரவரி | 4 | 19 | 13 | 22 | 11 | 15 | 3 |
| மார்ச் | 6 | 20 | 12 | 24 | 12 | 2, 17 | 4 |
| ஏப்ரல் | 4 | 19 | 8 | 22 | 11 | 1, 15, 30 | 3 |
| மே | 4 | 18 | 6 | 22 | 10 | 15,30 | 3 |
| ஜூன் | 3 | 17 | 2, 29 | 20 | 8 | 13, 28, 29 | 1 |
| ஜூலை | 2, 31 | 16 | 26 | 20 | 8 | 12, 28 | 1, 30 |
| ஆகஸ்ட் | 29, 30 | 15 | 23 | 19 | 6 | 11, 26 | 28 |
| செப்டம்பர் | 28 | 13 | 19 | 17 | 4 | 9, 25 | 27 |
| அக்டோபர் | 27 | 13 | 16 | 17 | 4 | 9, 24 | 26 |
| நவம்பர் | 26 | 12 | 13 | 15 | 2 | 8, 22 | 24 |
| டிசம்பர் | 25 | 11 | 10 | 15 | 2 | 8,22 | 24 |



aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app GET IT ON Google Play

அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.

கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம்
இதழின் ஆசிரியர் குழுவில்
இணைந்து செயல்பட உங்களுக்கு
வாய்ப்பு தரப்படுகிறது.
ஆன்மிகம் சம்பந்தப்பட்ட
விஷயங்களை எழுத
ஆர்வமுள்ள அன்பர்கள்
எங்களை தொடர்பு
கொள்ளுங்கள், விளம்பரம் பெற
விரும்புபவர்களும் எங்களை
தொடர்பு கொள்ளவும்.
உங்களை எங்களுடன்
ஒருவராக இணைத்துக்
கொள்கிறோம்.
தொடர்பு கொள்ளவும்
08825844033



# காலத்தை அடக்க

பூமியில் எது சரியாக இருக்க வேண்டும்? பகவானுக்கு தெரியாது; உனக்கு தான் தெரியும். இதெல்லாம் பகவான் செய்து கொடுத்தால்? உள்ளதை உள்ளபடி பேசினால் தான் பகவானை நினைக்க முடியும். உள் நுணுக்கங்கள் தெரிந்து கொண்டால் தான் அவன் பெருமை நமக்குத் தெரியும். உனக்குத் தெரிய பேசு! மாணத் தகுந்தது என்று ஆச்சரியப்படு.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கிலா அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர் அன்னவர்க்கே சரண்நாங்களே!'

அவனுக்கு மட்டுமே சரண்! என் தலைவன், குரு, செடி, கொடி, நிலவு, சூரியன்–அவன் தான் சிருஷ்டி செய்தான். அப்போது அவனை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். ஏன்? அதீதமான சக்திகள் எல்லாம் கையிலே பிடித்து வைத்துக் கொள்ளும்போது பகவான் மீது மாணத்தகுந்தது.



இவை பட்டம் (சர்ட்டிபிகேட்) இல்லை. ஆத்மார்த்தமாக தெரிந்து கொண்டால், உணர்தல் வேண்டும். பகவத் விஷயம் அதீதமாகத் தெரிந்து கொள்! இதில் மதம், ஜாதி கிடையாது. இருக்கு என்று நினைத்தால் இறங்கி விடுவான்.

எண் ஜான் உடம்புக்கு உடலே பிரதானம். ஓணான் தல மனிதனுக்கு இருந்தால்? ஓணான் ஓணானாக இருக்க வேண்டும்... முள் வேலியில் எப்படி நகர்ந்து போவது என்று தெரியும். எலிக்கு ஓணான் குணம் இருந்தால் செத்துப் போய்விடும்.

ரகசியம் – இந்த சிருஷ்டியைப் பார்த்து மனிதன் செயற்கையாகப் படைத்தான். ஒன்றைப் பார்த்து ஒன்றை தெரிந்து கொள். பறவையை பகவான் பூமியில் பிறக்க வைக்க இல்லையெனில் ஆகாய விமானம்(ஏரோபிளேன்) பண்ணி இருக்க முடியுமா? சிருஷ்டி கர்த்தாவை தெரிந்து கொள்! ஏன் இந்த வண்ணம் படைத்தான் என்று தெரியும். படைப்பாளி ஒரு சட்டம் அமைப்பானானால், அதற்குள் அது விழும்.

இது காலம் காட்டும் கடிகாரம்.. எந்த கோணத்தில் இருக்கிறது? கோணங்கள் இருந்தால் தான் பகவானைப் பிடிக்க முடியும். ஆங்கிலத்தில் 'டைமன்ஸன்ஸ்' என்று பெயர். இதற்குள் காலம் அடங்கி இருக்கிறது. தத்துவத்தை நேராகப் பார்க்க நேராக கோடு போடு! தத்துவம் எங்கும் பரவும். அதுபோல், காலத்தை வட்டத்துக்குள் அடக்கிவிடலாம்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## நூலும் நூலும்

நாலு சட்டம் நூல் நூற்றிருந்தாலும் அது துணி ஆகாது. துணி நெய்பவனிடம் கொடுத்து நெய்தால் தான் துணி. எவ்வளவு சாஸ்த்திர நூல்கள் படித்திருந்தாலும் மந்திரங்கள் தெரிந்திருந்தாலும் குருநாதன் என்ற நெசவாளியிடம் போகாமல் பணிவு, பக்தி போன்ற இறைக் குணங்கள் வராது, அருளும் கிட்டாது. பக்தி பணிவுடன் இருந்தால் நூல்களைத் தெரிந்து கொள்ளாமலே அருள் கிட்டி விடும். உனக்கு எது வேண்டும் நூலா? துணியா?

## பரிணாம வளர்ச்சிப் படம்

கோவிலுக்குப் போவது – உற்சவம் பார்ப்பது – கடவுளைத் தூக்குவது – சுத்தம் செய்வது – துதிப்பது – அனைவரையும் சமமாக நினைப்பது – சமாதி இந்த குணங்களான ஏணி வழியாக உயரலாம். காமம், குரோதம், ஆணவம், இத்யாதி இத்யாதி குணங்களான பாம்பு வழியாக இறங்கலாம். பக்தி செய்தால், குருவைச் சரணடைந்தால் அவனே ஆட்டம் ஆடி நம்மை உயர்த்துவான். ஆடி நம்மை உயர்த்துவான். இதுதான் பரிணாம வளர்ச்சியின் வரைபடம்.

## பல்பொடியும் பகவானும்

பல்பொடி விற்பவன் எல்லா சினிமா பாட்டையும் பாடுகிறான். மக்கள் மகிழ்ந்திருக்கும் வேளையில் தான் கொண்டுவந்த பல்பொடியை விற்கிறான். அவனுக்கு பாட்டில் எந்த தனி அபிப்பிராயமும் இல்லை. அதுபோல் எல்லா மதங்களிலும் இருக்கும் கடவுளை விற்க, அனைவரையும் பக்தர்களாக்க ஞானி எல்லா மதத்தையும் அணைத்துக்கொண்டு போகிறான். ஞானிக்கு மதமும் முக்கியமில்லை. கடவுளை எல்லார் மனதிலும் வைக்க வேண்டும். அதுவே லட்சியம்.

(ஞானிகள் அருளிய "ஸ்ரீதத்தகளஞ்சியம்" பாகம்9 என்ற நூலிலிருந்து)

# ஆங்கில புத்தாண்டு
## கொண்டாட்டம் தேவையா




ஆன்மீகத்துடன் கூட, விஞ்ஞானம், கலை, இசை, ஆயுர்வேதம், கணிதம், வடிவியல், வானவியல் போன்றவற்றிலும், ஹிந்து மதத்தின் பங்களிப்பு உலகத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்ததும், நாம் பெருமை படகூடியதும் ஆகும். இருந்தபோதிலும், தற்காலத்தில், ஹிந்துக்கள் தங்கள் பழம்பெருமையை அறியாமல், கண்மூடித்தனமாக மேற்கத்திய மோகத்தில் இருக்கிறார்கள். இது நமது தர்ம போதனையைப் பற்றிய அறியாமையினால் வந்தது. புத்தாண்டு கொண்டாட்டம் என்றால், ஹிந்துக்கள் டிசம்பர் 31 நடு இரவில் அல்லது ஜனவரி 1 ஆம் தேதி கொண்டாடுவதுதான் சரி என நினைக்கிறார்கள்.

**டிசம்பர் 31-இல் புத்தாண்டு எப்படி கொண்டாடப்படுகிறது**

உணவகங்களும், உணவு விடுதிகளும் சிறப்பு நிகழ்ச்சிகளையும். தொலைக்காட்சி நிலையங்கள் சிறப்பு காட்சிகளையும் ஏற்பாடு செய்கின்றன. ஒவ்வொருவரும் புத்தாண்டு கொண்டாட்டத்தை வருமானம் தரும் வழியாக கண்டு, அந்தக் கூட்டத்தோடு கலந்து கொள்கின்றனர். எல்லாரும் தெருக்களிலும், சதுக்கங்களிலும் கூடி ஆட்டம்பாட்டம், குடி என்று ஒருவரோடு ஒருவர் சேர்ந்து களிக்கின்றனர். புத்தாண்டு தினத்தின் முந்தைய இரவில் தான் மருத்துவ இல்லங்களில் அதிகமாக, அவசரசிகிச்சை பிரிவுகளில் பலர் அடிபட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்றனர். பாதிக்கப்படுவோர் இளைஞர்கள்தான். தகுந்த தர்ம போதனை இல்லாததாலும், கண்மூடித்தனமாக மேற்கத்திய கலாச்சாரத்தை பின்பற்றுவதாலும், மேற்கத்திய பாணி புத்தாண்டுக் கொண்டாட்டங்களை அவர்களால் தடுக்க முடிவதில்லை.

**டிசம்பர் 31-ஐ அவசியமா?**

வருடத்தின் கடைசி நாள் டிசம்பர் 31. நள்ளிரவு மணி 12 எப்போது அடிக்கும் என்று துடிப்புடன் காத்திருப்பார்கள்.

அந்த கணத்தில் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துக் கொண்டு, மகிழ்ச்சி ஆரவார சூழ்நிலையில் இருப்பார்கள். வானவேடிக்கைகளும்,பட்டாசு வெடிகளும் வானில் பறக்கும். அதை தொடர்ந்து, குடித்துக்கொண்டும் உணவு அருந்திக்கொண்டும் இருப்பார்கள். உண்மையைச்சொல்வதென்றால், டிசம்பர் 31-ஐ ஏன் வருடத்தின் கடைசி நாள் அல்லது ஜனவரி 1-ஐ ஏன் வருடத்தின் முதல் நாள் என கொண்டாடுவதற்கு தர்க்கரீதியாக எந்தக் காரணமும் இல்லை. அப்படியிருந்த பொழுதிலும், உலகம் முழுவதிலும் பெரும்பாலான மக்கள் வருடத்தின் முதல் நாளன்று ஒய்வு எடுத்துக்கொள்கின்றனர்.

**புத்தாண்டு என்பது எந்த நாளாக இருக்க வேண்டும்?**

ஒரு குழந்தை பிறந்தால், அந்த தினமே குழந்தையின் பிறந்த நாளாகிறது. அந்த நாள், மாதம், வருடம் அந்த குழந்தையின் பிறந்த நாளாக கருதப்படும். அதிலிருந்து வருடந்தோறும் அதே மாதம், அதே நாள் அக்குழந்தையின் பிறந்த நாளாக இருப்பதால், அந்நாள் பிறந்தநாளாக கொண்டாடுவதற்கான காரணமாக அமைகிறது. அதே தர்க்கப்படி பார்த்தால், இந்த பிரபஞ்சம் ஜனவரி 1ஆம் தேதி உருவாக்கப்படவில்லை. எனவே, ஜனவரி 1, டிசம்பர் 31-ஆம் தேதியை வருடப்பிறப்பாகக் கொண்டாடுவதென்பது குழந்தையின் பிறந்த நாளை ஏதோ ஒரு நாளில் கொண்டாடுவதற்கு ஒப்பானது.

**புத்தாண்டு எவ்வாறு கொண்டாடப் பட வேண்டும்?**

புதிதாக ஏதேனும் ஒன்று ஒரு நாளில் நிகழுமேயானால், அந்நாளை ஒரு புதிய ஆண்டாக நாம் அழைக்கலாம். இப்பிரபஞ்சம் ஜனவரி 1ஆம் தேதி உருவாக்கப்படவில்லை.




ஆகையால் ஜனவரி 1 தேதியை புத்தாண்டாகக் கொண்டாடுவது ஒப்புக் கொள்ளக்கூடியதாக இல்லை. ஹிந்துக்கள் சித்திரை மாத முதல் நாளை புத்தாண்டாகக் கொண்டாட வேண்டும்.

ஸ்ரீமத் பகவத்கீதையை படிக்கும்பொழுது, பிரபஞ்சம் எவ்வாறு கடவுளால் உருவாக்கப்பட்டதுஎன்று உணரும்போது மற்றவையெல்லாம் மேம்போக்கானவை என்பது தெரிகிறது.

ஹிந்து மத நூல்கள் எதிலும் டிசம்பர் 31 அல்லது ஜனவரி 1ஆம் தேதியை உலகத்தை உண்டாக்கிய நாளாகக் (புத்தாண்டாக) கூறப்பட வில்லை. பழங்காலத்தில் (சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்) டிசம்பர் 31 அல்லது ஜனவரி 1 என்ற ஒன்று இல்லவேஇல்லை.யாரும்அந்நாட்களைபுத்தாண்டாக கொண்டாடுவதில்லை. சமீப காலமாகத்தான், கிறிஸ்துவ மததாக்கதினால்தான், டிசம்பர் 31, ஜனவரி 1 ஆகியவை நடைமுறைக்கு வந்து, புத்தாண்டும் கொண்டாடபடுகிறது. மாறாக, ஹிந்து தர்மத்தைச் சார்ந்த முனிவர்கள் பிரபஞ்ச படைப்பைப் பற்றி ஆழ்ந்து படித்து, தங்களின் தெய்வீகத் திறனால், பிரபஞ்சம் என்று உருவாக்கப்பட்டது என்று மிகத்துல்லியமாகக் கண்டறிந்தனர். இதுவரை பிரபஞ்சம் தோன்றி, கடந்துவந்த காலத்தையும் கணக்கிட்டனர். அடுத்து எப்பொழுது பிரபஞ்சம் முழுமையும் அழியும் என்பதனையும் கணக்கிட்டுள்ளனர்.

எனவே ஹிந்து தர்மத்தை பின்பற்றுவதால் டிசம்பர் 31, ஜனவரி 1 ஆகியவற்றை முறையே புத்தாண்டு முந்தைய நாள், புத்தாண்டு நாள் எனக் கொண்டாடுவது, சரியான பிறந்த நாளைக் கொண்டாடாமல், குருட்டாம்போக்கில் ஏதோ ஒரு நாளை பிறந்த நாளாகக் கொண்டாடுவது போலாகும்.

நமது ஹிந்து தர்மத்தின்பால் பெருமை கொள்ளுங்கள். பிரபஞ்சம் உண்மையில் உருவாக்கப்பட்ட நாளான சித்திரை மாத முதல் நாளை புத்தாண்டாகக் கொண்டாடுங்கள்.

**ஏன் சித்திரை முதல் நாளை புத்தாண்டாகக் கொண்டாட வேண்டும்?**

வருடத்தை மங்களகரமாக ஆரம்பிக்க, சித்திரை மாத வருடப் பிறப்பை கொண்டாட வேண்டும். இந்நாள் ஒரு பொன்னாளாகும். ஹிந்து சாஸ்திரப்படி இந்நாளைக் கொண்டாடுவதால் பல பயன்கள் ஏற்படுகின்றன.

இயற்கை காரணம் காலங்களில் நான் வசந்தம் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகின்றார்.

சரித்திர காரணம் ராமனால் வாலி வதம் நடந்த தினம், ராவணாதிகளை அழித்து அயோதிக்கு ஸ்ரீராமன் திரும்பிய தினம்.

ஆன்மீக காரணம் இன்றே ப்ரம்மா ப்ரபஞ்சத்தை படைத்த தினம். சுப முகூர்த்ததினம்.

சித்திரை மாத வருடப் பிறப்பைக் கொண்டாடுவதன் மூலம், ஸனாதன ஹிந்து தர்மம், பாரத தேசம், மற்றும் மொழி மீது நம் பற்றுதல் வளரும். ஹிந்து தர்மப்படி, ஒவ்வொரு நற்செயலும், குளித்து முடித்து, தூயஆடை, அணிகலன்கள் அணிந்து, நல்ல நேரமான வைகறையில் (பிரம்மமுகூர்த்தம்) சமய சடங்கு வழிபாட்டுடன் ஆரம்பிக்கும். இதன் விளைவாக, காற்று மண்டலத்திலுள்ள சாத்வீக அம்சம் செய்பவர் மேல் நற்பதிவுகளை ஏற் படுத்தி, அவரிடமும், சுற்றுசூழலிலும் ஆன்மீகத் தூய்மையை அதிகப்படுத்தும்.

சித்திரை முதல் நாளன்று, பிரஜாபதியின் அலைகளும், ஆதி அக்னி மூலமும் பெருமள வில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். சூர்ய உதயத்தின் பொழுது, இந்த அலைகளின் வழியாக பாய்ந்து வரும் தெய்வீக விழிப்புணர்வு நெடுநேரத்திற்கு நீடிக்கும். அது தனி நபரின் உடல் திசுக்களில் சேமித்து வைக்கப்பட்டு, அவருக்குத்தேவையான நேரத்தில் பயன்படுத்தப்படும்.

சித்திரை முதல் நாளன்று காற்றுமண்டலத்தில் நிலவும் அமைதியையும், அதிர்வையும், டிசம்பர் 31. ஜனவரி 1 ஆகிய தேதிகளில் இருக்கும் காற்று மண்டலத்தையும் நாமே ஒப்பீடு செய்து, டிசம்பர் 31 ஐ புத்தாண்டாகக்கொண்டாடுவது முறைதானா என்று நாம் தீர்மானிக்க முடியும்.

**நடைமுறைக் குறிப்புகள்:**

மேற்கத்திய சமூக கட்டமைப்பு சீர்குலைந்து விட்டது. அதை தீர்த்துவைக்க, மேற்கத்தியர்கள் இந்தியாவின் ஆன்மீகத்தையே நாடி வருகின்றனர். மேற்கத்தியரைப் போலியாகப் பின்பற்றுவதால், ஹிந்துக்கள் தங்களின் தனித்துவத்தை இழப்பது கேலிக்குரியது. பிறமத நண்பர்கள், உடன் வேலை செய்பவர்கள் விருப்பபட்டால், சித்திரை முதல் நாளன்று அவர்களையும் அழைத்து, புத்தாண்டைக் கொண்டாடுங்கள்.

மேலும் விவரங்களுக்கு:
hindujagruti
தொ.எண்: 9380949626








# அன்னதானத்தின் மகிமை

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்கிறது தர்மசாஸ்திரம். அதனால்தான் கிருஷ்ண பகவானும் கீதையில், “எவன் தனக்காக மட்டும் ஆகாரம் தேடிச்சாப்பிட்டுக் கொள்கிறானோ அவனுடைய பாபத்தையும், முழுக்க அவனேதான் அனுபவித்தாக வேண்டும் வேறு எவரும் அதில் பங்கு எடுத்துக்கொள்ள மாட்டார் என்கிறார்”.

அன்னதானத்தில்தான் ஒருவரை பூரணமாக திருப்திபடுத்த முடியும். பணம், காசு, வஸ்திரம், நகை, பூமி, வீடு இதுபோன்றவற்றை எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கொள்கிறவர்கள், அதற்கு மேல் கொடுத்தால் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். அன்னம் போடுகிற போது தான் போதும் என்ற திருப்தி ஏற்படும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரத கலாச்சாரத்தில், ரிஷிகளின் சமூக சிந்தனைதான் பசியற்ற பாரதத்தைக் காண விழையும் சிந்தனை. வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்ற சிந்தனையால் விளைந்ததே அன்னதானம் என்கிற உயரிய தானம்.

அன்னதானத்தால் ப்ராணனையும், ப்ராணனால் பலத்தையும், பலத்தால் தவத்தையும், தவத்தால் ச்ரத்தையையும், ச்ரத்தையால் புத்தியையும், புத்தியால் மனத்தையும், மனத்தால் சாந்தியையும், சாந்தியால் சித்தத்தையும், சித்தத்தால் நினைவையும், நினைவால் ஸ்திதப்ரக்ஞையையும், ஸ்திதப்ரக்ஞையால் விஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தால் ஆத்மாவையும் பெறுவதால் அன்னதானம் செய்வது இவையனைத்தையும் தருவதற்கு சமமாகும்.

அன்னபூர்ணே ஸதாபூர்ணே ஸங்கர
ப்ராணவல்லபே
ஞானவைராக்ய ஸித்யர்த்தம்
பும் தேஹி ச பார்வதீ

கர்ணன் வாழ்ந்த காலத்தில் தன்னுயிர் காக்கும் கவச குண்டலங்கள் உட்பட தான் செய்த புண்ணியங்கள் அனைத்தையும் தானம் கொடுத்து தனத்திற்கே பெயர் பெற்றவன். அவன் இறந்து சொர்க்கம் சென்றபொழுது, கர்ணனுக்கு அங்கு அடங்காப்பசி ஏற் பட்டது. அதற்கான காரணம் குறித்து சொர்க்க லோகத்தின் தலைவனிடம் கேட்டான். அதற்கு சொர்க்கலோகத்தின் தலைவனோ, கர்ணா நீ பூலோகத்தில் வாழ்ந்த காலத்தில் பொன்னும், பொருளும் மனியும் ஏன் உன்னுயிரும் தானமாக கொடுத்து புகழ் பெற்றவன். ஆனால் வாழ்நாளில் யாருக்கும் நீ அன்னதானம் செய்யவில்லை, தனத்திற்கெல்லாம் தலையாய தானமான அன்னதானம் செய்யாததால் தான் உனக்கு இந்த அடங்காப்பசி உண்டாயிருக்கிறது என்றார்.

இந்த புண்ணிய பூமியில் ஆதரவற்றோருக்கு அன்னமளிப்பவன் மாபெரும் செல்வந்தராக வாழ்வான். தானம் செய்வதற்கு பணம் முக்கியமே அல்ல. நல்ல மனம்தான் வேண்டும். சிலர் தானம் செய்வது எள்முனை அளவு கூட வெளியில் தெரியாது. மன நிறைவுக்காக ஏழை எளியவர்களை, ஆதரவற்றோர்களை தேடி, தேடி போய் உதவி செய்து கொண்டே இருப்பார்கள்.

முதியோர் இல்லங்களில் வாழ்பவர்கள், அனாதை இல்லங்களில் வாழ்பவர்கள், ஏழைகள் இவர்களுக்கெல்லாம் அன்னதானம் செய்தால் அவர்கள் பெறும் மகிழ்ச்சியானது நமக்கு மகிழ்ச்சியையும், புண்ணியத்தையும் தரும்.

ஒரு ஆதரவற்றோர் இல்லத்துக்கு சென்று அன்னதானம் செய்து பாருங்கள், அவர்கள் முகம் கோடி சூரியனை கண்டது போல பிரகாசிக்கும். அந்த மகிழ்ச்சி தரும் புண்ணியத்துக்கும், திருப்திக்கும் அளவே இல்லை.

இதுபோன்றுதான் தெய்வகாரியங்களிலும், ஈடுபடும்போது, அக்காரியங்களில் ஈடுபடும் அன்பர்களுக்கு அன்னதானம் கொடுக்கும்போது, அன்னதானம் பெரும் அன்பர்களின் வயிறு நிறைந்து மனதார வாழ்த்தும்போது, அவர்கள் மேற்கொண்ட தெய்வ காரியங்களின் பலனின் நிழல் பலன் அன்னதானம் கொடுத்தவரை வந்து சேரும்.

இதனால்தான் திருவண்ணாமலை கிரிவலம், சபரிமலை யாத்திரை, பழனி பாதயாத்திரை போன்ற இடங்களில் அவசியம் அன்னதானம் அளிப்பதை ஆன்மிக அன்பர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒருசில நேரத்தில் அன்னதானத்தை தனிப் பட்ட மனிதர்களால் செய்ய முடியாத போது, ஒரு குழுவாக சேர்ந்து அன்னதானம் மற்றும், அந்த நிகழ்வில் கலந்து கொண்டு சேவை செய்யும் அன்பர்களுக்கும் மேற்சொன்ன பலன் வந்து சேரும் என்பதால்தான் மேற்கண்ட நிகழ்வுகளில் பெரும்பாலான அன்பர்கள் தானாக முன்வந்து சேவையாற்றுகின்றனர்.

இதுபோன்ற சேவையை பல்வேறு அமைப் பினர் பல்வேறு விழாக்களில் வெகு சிறப்பாக செய்து வருகின்றனர். அந்த வகையில், நடைபெறவிருக்கும் தைப்பூசத்தையொட்டி, பழநிக்கு பாதயாத்திரை வரும் பக்தர்களுக்காக, ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் சன்னதி அருகே, எல்.என்.திருமண மண்டபத்தில், ‘பழநிமுருகன் அன்னதானக் குடில்’ அமைக் கப்பட்டுள்ளது.

சென்னையை சேர்ந்த, சிறுவாபுரி முருகன் புகழ்பாடும், அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழு, ஒன்பதாம் ஆண்டாக இந்த குடிலை, அமைத்துள்ளது. ஜனவரி, 18ம் தேதி மாலையில் பக்தி இன்னிசை, கூட்டு வழிபாடுடன் வெகு விமரிசையாக அன்னதானம் துவங்கவிருக்கிறது.

இந்தக் குழுவின் அன்னதானம் மிகவும் பிரசித்திபெற்றது. பாதயாத்திரை வரும் அன்பர்களை மிகவும் கனிவுடன் உபசரித்து, அன்னதானம் வழங்குகின்றனர். இவர்களின் அன்னதான நிகழ்வில் சேவை புரிய விரும்புபவர்கள், இந்த குழுவினரை தொடர்பு கொண்டு தங்களையும் இந்த சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

மேலும் 19ம் தேதி காலை, 9:00 மணிக்கு மஹா சக்தி வேல்பூஜை வேல் மாறல் பாராயணம் நடக்கிறது. பக்தர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவ முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அன்னதானத்தில் பங்கேற்க விரும்பு பவர்கள், 099443 09719 / 098421 98889 இந்த எண்ணில் தொடர்பு கொண்டு அன்னதான சேவையில் இணைந்து பணியாற்றலாம்.


ஆன்மிகமலர் மெயில் புக்

# குண்டலினி சக்தி என்பது மாயாஜால சக்திகளை பெறுவதற்கானது அல்ல

மனிதனது உடம்பில், மூலாதாரத்தில் இருந்து புறப்படுகிற குண்டலினி சக்தி எந்தெந்த சக்கரத்தில் வருகிற போது, என்னென்ன நிகழ்வுகள் மனிதனுக்கு நிகழும் அவன் எப்படிபட்டவனாக இருப்பான் என்று ஆராய்ந்து வருகிறோம். அதில் சென்ற பகுதியில், குண்டலினி சக்தி தங்குகிற மூன்று இடங்களை ஓரளவு தெளிவாகவும், எளிமையாகவும் புரிந்துகொண்டோம் என்று நினைக்கிறேன். ஆகவே, இனி நான்காவது நிலையாகிய அனாஹத சக்கரத்தில் குண்டலினி வரும்போது என்ன ஏற்படும் என்பதை சிந்திக்கலாம்.

அனாஹத சக்கரம் என்பது பனிரெண்டு இதழ்கொண்ட தாமரைப் பூவின் வடிவமாக இருக்கும். இந்த வடிவம், எந்த நிறமும் இல்லாமல் தெளிந்த நீரை போல் இருக்கும். இன்னும் விளக்கமாக சொல்லவேண்டும் என்றால், ஸ்படிக நிறத்தில் இருக்கும் எனலாம். இந்த சக்கரம் வாயு அம்சம் பொருந்தியது. இதன் அதிதேவதை ராகிணி என்ற பெயர் கொண்டதாகும். இந்த தேவதை ஆகாயம், காற்று ஆகிய இரண்டு தத்துவங்களை விளக்குவதனால், இரண்டு முகம் கொண்டதாக இருக்கிறது. மேலும் கைகளில் ஜபமாலை, சூலம், கபாலம், உடுக்கை ஆகியவைகளை ஏந்தி நான்கு கரம் கொண்டதாக காட்சியளிக்கிறது.

அனாஹதம் இரத்த தாதுவை மையமாக கொண்டு, பனிரெண்டு தளங்களில் காலராத்திரி, கண்டிதா, ஹண்டாஹஸனி, நூர்ணா, சண்டா, காயத்திரி, சாயா, ஜெயா, ஜெங்காரிணி, ஞானரூபா, டங்கஹஸ்தா, டங்காரணி என்ற பனிரெண்டு அச்சரங்களை பனிரெண்டு தத்துவங்களாக கொண்டுள்ளது. மற்ற மூன்று சக்கரங்களில் குண்டலினி சக்தி நடந்து வருகின்றபோது அமானுஷ்யமான அனுபவங்கள் எதையும் மனிதன் பெறமுடியாது. ஆனால், அனாஹத சக்கரத்தில் குண்டலினி சக்தி வந்து உட்காரும் போது இதுவரை அவன் காணாத, கனவிலும் காணமுடியாத பல அமானுஷ்ய சக்திகளை நேருக்கு நேராக பார்க்கலாம். அவைகளின் ஓசைகளையும் கேட்கலாம்.

ஆஹாதம் என்றால் அடித்தல் என்ற பொருளை கொள்ளலாம். அன் என்ற சத்தத்தோடு ஆஹாதம் என்ற வார்த்தை சேரும் போது, அனாஹதம் என்ற புதிய வார்த்தை பிறக்கிறது. அனாஹாதம் என்றால் அடிக்காமல் எழும்பும் ஓசை என்பது பொருளாகும். அதாவது சாதாரணமாக நான் கேட்கின்ற ஓசைகள் எல்லாம் யாரோ அல்லது எதுவோ எழுப்புகின்ற ஒசைகளாகும். அலை அடிப்பதனால், கடல் ஓசை தருகிறது. காற்று வீசுவதனால், காற்றும் சத்தம் போடுகிறது. மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட வாகனம் இரைச்சல் போடுவது கூட அதன் இஞ்சின் இயங்குவதால் ஆகும். கொட்டாவி சத்தம், குறட்டை சத்தம் என்பவைகளும் நாம் எழுப்புவது தான்.

மலைமீதிலிருந்து வருகிற மணியோசை, அலையோசை, இடியோசை இசைகலைஞன் ஒருவன் எழுப்பும் வீணையின் நாதம் புல்லாங்குழலின் மெல்லிசை, வண்டின் ரீங்காரம், பிரணவ மந்திரத்தின் ஓம் என்ற சாந்தி ஒலி, இவைகளில் ஏதாவது ஒன்று நீங்கள் ஆழ்ந்த தியானத்திலிருக்கும் போது உங்களுக்குள் கேட்டால் ஓசையில் இருக்கும் இன்பம் அப்போது தான் உங்களுக்கு புரியும். அந்த ஓசைகள் எதுவும் வெளியிலிருந்து கேட்பதில்லை. வேறு யாரும் எழுப்புவதும் இல்லை. உங்களுக்குள், அனாஹத சக்கரத்தில் குண்டலினி சக்தி வந்து உட்கார்ந்துவிட்டது என்பதன் அறிகுறியே இந்த சப்தமாகும். சப்தம் மட்டுமல்ல, அழகான திவ்யமான உருவங்களையும் நீங்கள் இந்த நேரத்தில் தரிசனம் செய்யலாம்.

அப்போது எனக்கு பதினேழு, பதினெட்டு வயது இருக்கலாம். உலகத்தை தெரிந்து கொள்ளாத அதே நேரம், ஆர்வம் மட்டுமே அலையடித்து கிளம்புகிற வயது. என் அக்காவிற்கு திருமணம் முடிந்திருந்தது. திருமணம் முடிந்து மறுவீட்டிற்கு அக்கா வந்திருந்த போது, மாப்பிள்ளை வீட்டிலிருந்து நிறைய உறவினர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஊமையன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். பார்ப்பதற்கு சற்று மனம் பிரண்டு போனவர் போல் இருப்பார். யார் என்ன சொன்னாலும், பறவை சிறகடிப்பது போல கடகடவென சிரிப்பார். நிறைய உண்ணுவார். இலையில் சாதத்தை மலைபோல் குவித்து வைத்து, அவர் சாப்பிடுவதை பார்த்து நான் மிரண்டுபோயிருக்கிறேன் .

பனைநார் கொண்டு செய்த கட்டிலில் நான் படுத்திருந்தேன். இவர் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். எனக்கு பயம். சராசரி நிலையில் இல்லாதவர் எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனாலும், அவரை ஒதுங்கி போ என்று சொல்ல இயலாது. காரணம் மாப்பிளை வீட்டிலிருந்து வந்திருக்கும் உறவினர்களில் ஒருவர். அவரை நான் அவமானப்படுத்தினால் அனைவருக்கும் வருத்தமாகிவிடும். அதனால், பயத்தை அடக்கிக் கொண்டு மிரண்டு பார்த்தவண்ணம் படுத்திருந்தேன். அவர் என்னை மிகவும் நெருங்கி உட்கார்ந்தார். என் வயிற்றின் மீது கையை வைத்த அவர் விரல்களால் ஏதேதோ வரைந்தார். எனக்கு எதுவும் புரியவில்லை. திடீரென்று என் வயிற்றில் கையை வைத்து மிக வேகமாக அழுத்தினார். என்னால் வலி பொறுக்கமுடியவில்லை. வாய்விட்டு கத்தாமல் முகம் சுழிக்க மௌனமாக கதறினேன்.

என்னைப் பார்த்து அவர் வித்தியாசமாக சிரித்தார். நான் பயந்தேன். பயப்படாதே! இப்போது இதன் அர்த்தம் உனக்கு தெரியாது. போகப் போக புரிந்துகொள்வாய் என்று கூறினார். அவர் பேசியது எனக்கு அதிசய மாக இருந்தது. காரணம் மற்றவர்களோடு அவர் உரையாடும் போதுவார்த் தைகளை தெளி வில்லா மல் பேசுவார். சற்று கூர்ந்து கவனித்தால் தான் அவர் என்ன






சொல்கிறார் என்பதை புரிந்துகொள்ள முடியும். ஆனால் இப்போது அவர் என்னிடம் பேசியவிதம் அச்சர சுத்தமாக இருந்தது. வெண்கல கிண்ணத்தில் வெள்ளிக்காசை போட்டதை போல, அவர் குரல் இருந்தது. இன்றும் அதை என்னால் மறக்கமுடியவில்லை.

அவர் அப்படி செய்துவிட்டு, என்னிடமிருந்து நகர்ந்து போய்விட்டார். சிறிது நேரத்தில் எனக்கு தூக்கம் வந்தது. தூக்கம் என்றால், சாதாரண தூக்கம் இல்லை. போதை அளவுக்கு மீறிப் போனால் ஏற்படுமே, ஒரு மயக்கம் அந்த மயக்கத்தை போல, அந்த தூக்கம் இருந்தது. தூங்கினேன் எவ்வளவு நேரம் தூங்கினேன் என்று, எனக்கு தெரியாது. ஆனால், நள்ளிரவில் விழித்தேன் வீட்டிலிருந்தவர்கள் திட்டிக்கொண்டே சாப்பாடு கொடுத்தார்கள். எல்லாம் கனவில் நடப்பதுபோல் இருந்தது. எனக்குள் இனம்புரியாத மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணரமுடிந்தது. அது சந்தோசமா? அல்லது சங்கடமா என்று கூட எனக்கு புரியவில்லை. என் நிலையை யாரிடமும் சொல்ல தெரிய வில்லை. சொல்லியிருந்தாலும் அவர்கள் புரிந்திருப்பார்களா? என்பதும் புரியவில்லை.

இரண்டு நாட்கள் அந்த உணர்வு இருந்தது. பிறகு படிப்படியாக குறைந்துவிட்டது. ஆனாலும், எனக்கு பிடித்தமான ஏதாவது ஒரு காரியத்தை மனம் லயித்து நான் செய்யும் போது, மீண்டும் அந்த உணர்வு தலை தூக்குவதை அறிந்தேன். அந்த உணர்ச்சி வரும்போதெல்லாம் சிறகு முளைத்து, வானத்தில் பறப் பது போலிருக்கும். சாதிக்க முடியாததையும் சாதித்துவிடலாம் என்ற அசாத்திய துணிச்சல் பிறக்கும். இப்படி ஒரு மாதம் சென்றிருக்கும் என்று நினைக்கிறேன். ஒருநாள் கனவில் வெண்பட்டு சேலையுடுத்தி ஒரு பெண் என் அருகில் வந்தாள். அவள் கைநிறைய புத்தகம் இருந்தது. அவை அனைத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டு, படி நன்றாக படி என்று கூறி மறைந்தாள்.

அந்த சம்பவத்தை இப்போது கனவு என்று சொல்கிறேன். ஆனால், அது கனவா? உண்மையில் நினைவில் நடந்ததா? என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. காரணம் என் வயது அப்படி. ஒருவேளை நான் உறங்காமல் இருந்த போது கூட நிஜமாக அந்த பெண் உருவம் வந்திருக்கலாம். என்னால், அறுதியிட்டு கூற முடியவில்லை. ஆனால், அதற்கு பிறகு என் வாழ்க்கை முற்றிலுமாக மாறியது. பள்ளிக்கூடம் சென்று படித்த பாடங்களை மறந்து தமிழை கூட எழுத்து கூட்டி படிக்கும் நிலையில் தான் அப்போது இருந்தேன் எனலாம். இந்த நிகழ்வு நடந்தபிறகு படிப்பிலிருந்த தடை விலகியது. நிறைய படித்தேன். நல்லது, கெட்டது என்று எதையும் விட்டுவைக்கவில்லை. ஓயாமல் படித்தேன், உறங்காமல் படித்தேன். கடையில் ஒருகையால் வியாபராம் செய்து கொண்டே மறுகையால் புத்தகத்தை புரட்டியவாறு படித்தேன். அசுரத்தனமான வெறி என்று சொல்வார்களே, அந்த வெறி எனக்கு படிப்பில் ஏற்பட்டது.



பிறகு பலகாலம் கடந்த பின்பு, அவர் எனக்கு குண்டலினி சக்தியை தற்காலிகமாக கிளப்பிவிட்டிருக்கிறார் அது புறப்பட்ட வேகத்தில் அனாஹத சக்கரத்தில் வந்து உற்கார்ந்து விட்டது. அதன் காரணமாகத்தான் இந்த அமானுஷ்ய அனுபவம் ஏற்பட்டது என்பதை புரிந்து கொண்டேன். இந்த நிலையில் இன்னும் அதிகமான அமானுஷ்ய அனுபவங்களும், மேஜிக் செய்வது போன்ற சித்துவிளையாட்டுகளும் சர்வ சாதாரணமாக கிடைக்கும். அவைகளை வைத்துக் கொண்டு பெயர், புகழ், பணம் என்று நிறைய சம்பாதிக்கலாம். பலர் குண்டலினியின் சக்தியின் இந்த படிதரத்தோடு நின்றுவிடுவதற்கு இதுவே காரணமாகும்.

குண்டலினி சக்தி என்பது மாயாஜால சக்திகளை பெறுவதற்கானது அல்ல. இறைவனை, இறைவனது அன்பை, அவனது கருணையை நேருக்கு நேராக அனுபவிப்பதற்காகவே, சித்தர் களும், ஞானிகளும் நமக்கு வகுத்து தந்த பாதையாகும். அந்த பாதையில் கற்களும், முற்களும் உண்டு என்பது போல இரத்தின கம்பளங்களும், கிரீடங்களும் கிடைக்கும்.

ஆனால், அவைகளின் மீது மயக்கம் கொண்டு, அங்கேயே நின்றுவிட்டால், பயணம் என்பது முற்றுப் பெறாமல் அப்படியே நின்றுவிடும். எனவே அனாஹத சக்கரத்தில், குண்டலினி சக்தி தங்கிவிடாமல், இன்னும் மேலே எழும்பி ஐந்தாம்படியாகிய விசுத்தி சக்கரத்தை அடைய வைக்கவேண்டும். அதற்கான முயற்சியை பக்தன் தொடர்ந்து செய்யவேண்டும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434


ஆன்மிகமலர் மெயில் புக்


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.
www.aanmeegamalar.com



# நட்சத்திர பலன்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி...

மனித பிறப்புகள் அனைத்தும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டு, இன்னாருக்கு இன்ன காரண காரியங்கள் நடைபெறவேண்டும் என்று விதி என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதை இன்னும் எளிதாக கூறவேண்டு மெனில், மனித பிறப்பின்போது அவருக்கென்று ஒரு நட்சத்திரம், திதி, நாள், கிழமை, வருடம் போன்றவை நிர்ணயிக்கப்பட்டு, இவற்றையெல்லாம் கொண்டு, அந்த மனிதனின் வாழ்நாளில் நடைபெறும், நடைபெறப்போகும் அனைத்தையும் அறிந்து கொள்ளும் விதமாக ஜாதகம் என்ற பெயரில் கணிக்கப்படுகிறது.

அக்காலத்தில் ஜாதகம்தான் ஒரு மனிதனின் ஆதார்கார்டாக விளங்கியது. எந்த நல்ல காரியங்கள் நடைபெற்றாலும் இந்த ஜாதகம் மூலமாகவே கணித்துவரப்பட்டது.

இதுபோன்ற ஜாதக கணிப்பில் ஒருசில குறைகள் இருந்தாலும், அதை நிவர்த்தி செய்யவும் ஜோதிடத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது. அந்த வகையில், ஒவ்வொருவரின் நட்சத்திரங்களுக்கு ஏற்ப அந்த அந்த நட்சத்திரத்திற்குரிய தெய்வங்களும் முக்கியத்துவம் வாய்ந்த சக்தியாகவும், பரிகார சக்தியாகவும் விளங்கின, அந்தவகையில் ஒவ்வொருவரின் நட்சத்திரத்திற்குரிய கோயில்களை பார்ப்போம்.

## அஸ்தம்:

**கோயில்: கோமல் கிருபா கூபாரேஸ்வரர் கோயில்**

தல வரலாறு: சிவனின் கண்களைப் பார்வதி கைகளால் பொத்தினாள். உலகமே இருளில் மூழ்கியது. அப்போது, சிவனும் தன் கையில் இருந்த ஹஸ்தாவர்ண ஜோதியில் மறைந்தார். சிவனைத் தேடி, அம்பாள் பசுவடிவில் பூலோகம் புறப்பட்டாள். அஸ்த நட்சத்திரத்தன்று சிவனை ஜோதிவடிவில் தரிசித்து ஐக்கியமானாள். பக்தர்கள் மீது கருணை(கிருபை) கொண்டவர் என்பதால் "கிருபா கூபாரேஸ்வரர்' என்று பெயர் பெற்றார்.

சிறப்பு: அஸ்த நட்சத்திரத்தினர் திங்கள், புதன்கிழமையில் வழிபடுவது நல்லது. அன்ன பூரணி அம்பிகை பசுவாக இங்கு வந்ததால் பசு,கன்று தானம் அளிப்பது சிறப்பு.

போன்: 95002 84866

## சித்திரை:

**கோயில்: குருவித்துறை சித்திரரத வல்லபபெருமாள்**

தல வரலாறு: தேவகுரு பிரகஸ்பதியின் மகன் கசனை, அசுரகுரு சுக்கிராச்சாரியாரின் மகள் தேவயானி திருமணம் செய்ய விரும்பினாள். கசனை அசுரலோகத்திலேயே கட்டாயப்படுத்தி இருக்கச் செய்தாள். மகனைக் காணாத பிரகஸ்பதி விஷ்ணுவை நோக்கி தவமிருந்தார். விஷ்ணு சக்கரத் தாழ்வார் மூலம் கசனை மீட்டார். இதை யடுத்து சக்கரத்தாழ்வாரும், தேவ குருவும் ஒரே இடத்தில் அமர்ந்தனர். அதுவே குருவித்துறை தலம்.

சிறப்பு: பிரகஸ்பதிக்கு அருள்புரிய விஷ்ணு, சித்திர ரதத்தில், சித்திரை நட்சத்திரத்தன்று எழுந்தருளினார். எனவே, இக்கோயில் சித்திரைக்குரியதானது. வியாழன், பவுர்ணமி, சித்திரை நட்சத்திர நாட்களில் தரிசிப்பது சிறப்பு.

போன்: 94439 61948, 97902 95795.

## சுவாதி:

**கோயில்: சித்துக்காடு தாத்திரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: படுக்கை ஜடாமுடி சித்தர், பிராணதீபிகா ஆகியோர் நெல்லிவனத்தில் சிவலிங்கம் நிறுவி வழிபட்டனர். சித்தர் தவ மிருந்த பகுதியானதால் இப்பகுதி சித்தர்காடு, சித்துக்காடு என அழைக்கப்பட்டது. நெல்லி மரத்தடியில் இருப்பதால் சிவனுக்கு "தாத் திரீஸ்வரர்' என்று பெயர். "தாத்திரீ' என்றால் "நெல்லி.

சிறப்பு: சுவாதி நட்சத்திரத்தினர் இங்கு சிவனை வழிபட்டால் செல்வ வளமிக்க வாழ்வு உண்டாகும். திருமணயோகம் விரைவில் கைகூடும். இங்கு குபேரருக்கு நெல்லிக்காய் ஊறுகாயுடன், தயிர்சாதம், புளியோதரை படைத்து வழிபட்டால் யோகவாழ்வு அமையும்.

போன்: 93643 48700, 9382684485.

## விசாகம்:

**கோயில்: பண்பொழி திருமலை குமாரசுவாமி கோயில்**

தல வரலாறு: பூவன்பட்டர் என்ற அர்ச்சகரின் கனவில் முருகன் தோன்றி, புதையுண்டு கிடக்கும் சிலையை திருமலையில் பிரதிஷ்டை செய்ய உத்தரவிட்டார். அதன்படி, பந்தளமன்னர் கோயில் கட்டினார். மண்டபம் எழுப்புவதற்கான கற்களை, சிவகாமி பரதேசி என்ற முருக பக்தை, மலை யடிவாரத்திலிருந்து வாழைமட்டை மூலம் இழுத்துச் சென்ற பெருமையுடையது.

சிறப்பு: விசாகம் என்றால் "மேலான ஜோதி'. இந்த நட்சத்திரத்தின் ஒளிக்கிரணங்கள் இம்மலையில் படுவதால் விசாக நட்சத்திரத்தினர் வழிபட்டால் வாழ்வில் நல்ல திருப்பம் உண்டாகும்.

போன்: 04633 237 131, 237 343.

## அனுஷம்:

**கோயில்: திருநின்றியூர் மகாலட்சுமிபுரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: ஜமதக்னி முனிவரின் மனைவி ரேணுகா கந்தர்வன் ஒருவனின் அழகை ரசித்தாள். இதை அறிந்த முனிவர் அவளது தலையை வெட்டும்படி மகன் பரசுராமனிடம் கூறினார். பரசுராமனும் அவ்வாறே செய்து, தந்தையின் உதவியோடு மீண்டும் தாயை உயிர்பெறச் செய்தார். இந்த பாவம் நீங்க தந்தையும் மகனுமாக திருநின்றியூர் சிவனை வழிபட்டனர்.

சிறப்பு: பூமியில் புதைந்துபோன சிவலிங்கம், சோழமன்னனால் கண்டறியப்பட்டு ஒரு அனுஷ நட்சத்திரத்தன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனவே இக்கோயில் அனுஷத்திற்கு உரியதானது. அனுஷ நட்சத்திர ஆண்கள் துவாதசி திதியன்றும், பெண்கள் வரலட்சுமி பூஜையன்றும் சிறப்பு வழிபாடு செய்தால் செல்வவளம் உண்டாகும்.

போன்: 04364 320 520

## கேட்டை:

**கோயில்: பசுபதிகோயில் வரதராஜப்பெருமாள் கோயில்**

தல வரலாறு: ராமானுஜரின் குருவான பெரியநம்பி, மார்கழி கேட்டையில் அவதரித்தவர். இவரது 105வது வயதில் சோழ மன்னன் ஒருவன் ராமானுஜர் மீதிருந்த கோபத்தால் பெரியநம்பியின் கண்களைப்

பறித்தான். அவர் பசுபதிகோயில் வரதராஜப் பெருமாளிடம் அடைக்கலம் புகுந்தார். அவரின் துன்பம் போக்கும் விதத்தில், பெருமாள் இங்கு மோட்சம் அளித்தார்.

சிறப்பு: பெரியநம்பியின் திருநட்சத்திர வைபவம் சிறப்பாக நடக்கும். கேட்டை நட்சத்திரத்தினர் வழிபட்டால் நல்வாழ்வு கிடைக்கும். கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் செவ்வாயன்று வரும் கேட்டையில் வழிபடுவது சிறப்பு.

போன்: 97903 42581, 94436 50920

## மூலம்:

**கோயில்: மப்பேடு சிங்கீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: சிவன் ஆனந்ததாண்டவம் ஆடியபோது மிருதங்கம் வாசித்தவர் சிங்கி என்ற நந்திதேவர். இசையில் ஆழ்ந்து கண்ணை மூடியபடி தாளம் போட்டதால், நடனத்தைப் பார்க்க முடியவில்லை. அதனால், மப்பேடு வந்து சிவபூஜை செய்து இறைவனின் நடனத்தைக் கண்டு களித்தார். மெய்ப்பேடு என்பதே மப்பேடு ஆகிவிட்டது. சிங்கி வழிபட்ட சிவன் என்பதால் சிங்கீஸ்வரர் எனப்பட்டார்.

சிறப்பு: மூலநட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பிரதோஷத்தன்று இங்கு வழிபடுவது சிறப்பு. இங்குள்ள நவவியாகரண கல் மீது ஏறி, நந்தியையும், மூலவரையும் ஒரே சமயத்தில் தரிசித்தால் ஆரோக்கியம் மேம்படும்.

போன்: 94447 70579, 94432 25093

## பூராடம்:

**கோயில்: கடுவெளி ஆகாசபுரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: சிவதரிசனம் பெற விரும்பிய கடுவெளிச்சித்தர் அருள்பெற்ற தலம் கடுவெளி. “கடுவெளி’ என்றால் “ஆகாசவெளி’. சோழ மன்னன் ஒருவன் இங்கு கோயில் கட்டினான். ஆகாயத்திற்கு அதிபதியாக ஆகாசபுரீஸ்வரர் இங்கு வீற்றிருக்கிறார்.

சிறப்பு: இத்தலம் பூராடம் நட்சத்திரத்திற்குரியது. ஆகாயவெளியில் உள்ள அனைத்து தேவதைகளும் பூராடத்தன்று இங்கு வழிபடுவதாக ஐதீகம். அன்று சிவனுக்கு புனுகு சாத்தி வழிபட திருமண, தொழில்தடை நீங்கும்.

போன்: 94434 47826, 96267 65472

## உத்திராடம்

**கோயில்: கீழப்பூங்குடி பிரம்மபுரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: படைப்புத் தொழிலைச் செய்ததால், சிவனை விட தானே உயர்ந்தவன் என்று பிரம்மா கருதினார். இந்த மமதையை அடக்க, பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒருதலையைக் கொய்தார் சிவன். தனது பாவம் தீர பிரம்மா, பூலோகத்தில் சிவனை வழிபட்ட தலம் கீழப்பூங்குடி. பழைய கோயில் அழிந்து போனதால் புதிய கோயில் கட்டப்பட்டது.

சிறப்பு: இங்குள்ள மீனாட்சி அம்மனின் நட்சத்திரம் உத்திராடம். இதில் பிறந்தவர்கள் பிரம்மபுரீஸ்வரரையும், மீனாட்சியையும் உத்திராடத்தன்று வழிபட வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். பவுர்ணமியன்று சிவனுக்கு விசேஷ பூஜை நடக்கும்.

போன்: 99436 59071, 99466 59072

## திருவோணம்:

**கோயில்: திருப்பாற்கடல் பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில்**

தலவரலாறு: புண்டரீக மகரிஷியின் பக்திக்கு இணங்கி பெருமாள் பிரசன்னமான தலம் திருப்பாற்கடல். சந்திரன் ஒரு சாபத்தால் இருளடைந்தான். அவன் மனைவியரில் ஒருத்தியான திருவோணதேவி வருந்தினாள். இங்கு வந்து வழிபட்டு கணவரின் சாபம் நீங்கப் பெற்றாள்.

சிறப்பு: திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருவோணம், மூன்றாம்பிறை ஆகிய நாட்களில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வழிபட நினைத்தது நிறைவேறும்.

போன்: 94868 77896,04177 254 929

## அவிட்டம்:

**கோயில்: கீழ்க்கொருக்கை பிரம்மஞானபுரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: கோரக்கசித்தர் ஒரு மடத்தில் தங்கியிருந்தார். இரவில் விழித்தபோது, அவரருகில் ஒருத்தி படுத்திருந்தாள். முந்தானை சித்தர் மீது கிடந்தது. இதற்கு பரிகாரமாக தன் கைகளை வெட்டிக் கொண்டார். சிவனருளால் கைகள் வளர்ந்தன. கையை வெட்டியதால் “கோரக்கை’ என்றும், குறுகிய கைகளால் வழிபட்டதால் “குறுக்கை’ என்றும் ஊருக்குப் பெயர் வந்தது. தற்போது “கொருக்கை’ எனப்படுகிறது.

சிறப்பு: அவிட்ட நட்சத்திரத்தன்று பிரம்மஞானபுரீஸ்வரர், பிரம்மாவுக்கு ஞானம் தந்ததால் இத்தலம் அவிட்டத்திற்கு உரியதானது. இந்த நட்சத்திரத்தினர் ஆவணி அவிட்டத்தன்று அடிப்பிரதட்சிணம் செய்து வழிபட்டால் யோக வாழ்வு அமையும்.

போன்: 98658 04862, 94436 78579

## சதயம்:

**கோயில்: திருப்புகலூர் அக்னிபுரீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: தவமிருந்த அக்னிதேவனுக்கு சந்திர சேகரராக சிவன் காட்சியளித்து அருள் புரிந்த தலம் திருப்புகலூர். ‘புகல்’ என்றால் அடைக்கலம். அடைக்கலம் புகுந்தவர்களை ஆட்கொள்பவராக சுவாமி இங்கு வீற்றிருக்கிறார். வர்த்தமானேஸ்வரர், மனோன்மணி அம்பாளும் இங்கு வீற்றிருக்கின்றனர்.

சிறப்பு: திருநாவுக்கரசர் தன் 81ம் வயதில் சித்திரை சதய நாளில் இங்கு சிவனோடு இரண்டறக் கலந்தார். இதை ஒட்டி பத்து நாட்கள் திருவிழா நடக்கும். சதய நட்சத்திரத்தினர் இங்கு வழிபட்டால் ஆயுள், ஆரோக்கியம், செல்வவளம் உண்டாகும்.

போன்: 04366 236 970

## பூரட்டாதி:

**கோயில்: ரங்கநாதபுரம் திருவானேஸ்வரர் கோயில்**

தல வரலாறு: இந்திரனும், அவனது ஐராவத யானையும் பூரட்டாதிநாளில் திருவானேஸ் வரரை பூஜித்து நற்பலன் பெற்றனர். கோச்செங்கட்சோழன் கட்டிய



முதல் மாடக்கோயில். இறைவன் இங்கிருந்தே காலச்சக்கரத்தைப் படைத்தார். கஜ கடாட்ச சக்தி விமானத்தின் கீழ் சுவாமி எழுந்தருளியிருக்கிறார்.

சிறப்பு: பூரட்டாதியன்று திருவானேஸ்வரரை வழிபட்டு ஏழு வண்ண ஆடைகளை ஏழைகளுக்கு தானம் அளித்தால் புத்திகூர்மை உண்டாகும். திருமணம், வேலைவாய்ப்பு தடையின்றி நடந்தேறும்.

போன்: 94439 70397, 97150 37810

## உத்திரட்டாதி:

**கோயில்: தீயத்தூர் சகஸ்ர லட்சுமீஸ்வரர் கோயில்**

தல வரலாறு: சிவதரிசனம் பெற விரும்பிய லட்சுமி, அகத்தியரின் ஆலோசனைப்படி பூலோகத்தில் வழிபட்ட தலம் தீயத்தூர். அவள், தினமும் ஆயிரம் தாமரை மலர்களால், சிவனை வழிபட்டதால் “சகஸ்ரலட்சுமீஸ்வரர்’ என்று பெயர் வந்தது. “சகஸ்ர’ என்றால் “ஆயிரம்‘.

சிறப்பு: உத்திரட்டாதி நட்சத்திரத்தில் அவதரித்த தேவசிற்பி விஸ்வகர்மா, ஆங்கிரஸர், அக்னி புராந்தக மகரிஷி ஆகியோர் அரூப வடிவில் சகஸ்ரலட்சுமீஸ்வரரை தரிசிக்க உத்திரட்டாதி நாளில் வருவதாக ஐதீகம். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பொங்கல் நைவேத்யம் செய்ய பணக்கஷ்டம் தீரும். செயல்பாடுகளில் தடை நீங்கும்.

போன்: 99652 11768, 04371239 212

## ரேவதி:

**கோயில்: காருகுடி கைலாசநாதர் கோயில்**

தல வரலாறு: சந்திரன் தன் மனைவியான ரேவதியுடன் சிவனருள் பெற்ற தலம் காருகுடி. “கார்’ எனப்படும் ஏழுவகை மேகங்களும் சிவனை வழிபட்டதால் இத்தலத்திற்கு “காருகுடி’ என்ற பெயர் உண்டானது. 1800 ஆண்டுகளுக்கு முன் கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி கோயிலைக் கட்டினான்.

சிறப்பு: ரேவதி நட்சத்திர தேவதை அரூப வடிவத்தில் (உருவமின்றி) தினமும் சிவனை வழிபடுவதாக ஐதீகம். ரேவதி நட்சத்திரத்தினர் இங்கு சுவாமிக்கு பாலாபிஷேகம் செய்து வழிபட நினைத்தது விரைவில் நிறைவேறும். தடைபட்ட சுபநிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.

போன்: 97518 94339, 94423 58146

● ஆன்மீகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# பிரதோஷ அரிசி

தோஷம் என்றால் தடை என்று பொருள். இத்தகைய தடைகளுக்கே பாபம் என்று பெயர். மனிதனின் தடைகளுக்கெல்லாம் மனிதனின் பாபமே காரணம்.

தண்ணீரினால் வருகின்ற தோஷத்திற்கு ஜலதோஷம் என்று பெயர். ஜலதோஷம் பிடித்த காலத்தில் மூக்கினால் மூச்சு விட முடியாது. இத்தடையை நீங்க மருந்து உண்ண வேண்டும். மனிதன் மூச்சு விடுகின்ற மொத்த காலம் மனிதனுக்கு அக்காலம் ஆண்டவன் அருளிய பொற்காலம்.

இதல் ஜலதோஷ காலம் பாப காலம். இது ஒழிய வேண்டும் என்பதே மனிதனின் நோக்கம். இதே போன்று பிரதோஷம் என்றால் பாபமான காலம் என்று பொருள்.

இப்படியே மஹா பிரதோஷம் என்றால் பஞ்ச மஹா பாபங்களை நிகழ்த்திய காலம் என்று பொருள். கொலை செய்தல், களவு செய்தல், பொய் சொல்லுதல், கற்பழித்தல், மது உண்ணுதல் இவைகளே ஐந்து பெரிய பாபங்கள்.

பிரதோஷம் என்றால் மனித சமுதாயம் செய்கின்ற பாவங்கள் என்றும், மஹாப்பிரதோஷம் என்றால் மனிதன் செய்கின்ற பெரிய பாபங்கள் என்றும் பெயர்.

இவைகளை மனிதன் எப்பொழுது எல்லாம் நிகழ்த்துகினறானோ அந்த நேரங்களுக்கெல்லாம் பாபமான காலம் என்று பெயர். காலமே மனிதனின் சிந்தனையைக் குறுக்கிடுகிறது.

முன்னேற்றத்தைக் குடுக்கிடாத காலத்திற்கே புண்ணியகாலம் என்று பெயர். அந்த நேரங்களில்தான் மனிதன் சிந்திப்பான் முன்னேறுவான். கடவுளை நினைப்பான். குறுக்கீடும் காலங்களை விலக்கிக் கொள்ளுங்கள். முன்னேற்றம் ஏற்படும்.

பிரதோஷகால பூஜையும், தரிசனமும் இதற்காகவே நிகழ்த்தப்படுகின்றன. பருவ காலம், மழைகாலம், வெயில்காலம் இதைப் போன்று நல்ல நினைவு என்ற புண்ணியமும், கெட்ட நினைவு என்ற பாபமும் மனிதனின் காலத்தையே குறுக்கிட்டு அவனை தீயவனாக ஆக்கிவிடுகிறது. இதை அறிந்து கொண்டான் சிவபெருமான். மனிதன்தான் செய்த தீமைகளை ஒப்புக்கொள்ள மாட்டான் திருந்த மாட்டான், இதுவும் ஆண்டவனுக்குத் தெரியும்.

மனிதனைத் தீயவனாக உலவ விடுவதில் என்ன லாபம்? அதனால் அனைவரையும், பிரதோஷ பூஜையை ஒப்புக் கொள்ளும்படியாகச் செய்து அக்காலத்தில் எவர் வந்து தன்னைப் பூஜித்து தரிசித்தாலும், புண்ணியம் என்றால் பாவம் தானாக மறையும், உடனே நல்லவை நடக்கும் முன்னேற்றம் என்றார் சிவன்.

அதற்காகப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை மாலை 4.30 மணியிலிருந்து 6 மணிவரை ஒரு காலத்தைப் பாப காலமாக அறிவித்தான். அக்காலத்தில் கூத்தாடி மகிழ்ந்தான். அப்பிரதோஷ காலம் தனக்கே உரியது என்றார் சிவன்.

இந்த மாலை வேளையில் வலிமையுள்ள நந்தியே இப் பூஜையைச் செய்கிறார். பாவமில்லாதவரே ஆவார்.

உலகில் நந்தியின் வடிவம் காளைமாடு, பசுமாடு இவை மிகப் பெரிய சாதுக்களே, பாபிகளல்ல, புண்ணிய ஜீவன்களான இவை பிரதோஷத்தில் ஆண்டவனை பூஜிக்கின்றன. அதனால் அப்பொழுது இறைவன் அவைகளுக்கு நிறைய அருகம்புற்களை மேய்வதற்குத் தருகிறார்.



இதைக் கண்டு பக்தர்களும் அந்த பூஜையில் நந்தியின் முன்னும் இறைவனின் முன்னும் அருகம்புல்லைப் போட்டு வழிபடுதல் வேண்டும் செய்தால் மனிதனின் பாபம் தொலையும். ஆண்டவனும் மனிதனை சமுதாயத்தில் மேய அருளுவான்.

பிரதோஷ தரிசனம் செய்பவர்கள் பசு, காளை இவைகளுக்குப் புற்களை வழங்கி வழிபட்டால் புண்ணியம் வந்து சேரும், பாபம் தொலையும்.

பிரதோஷ நேரத்தில் நந்தி சிவபெருமானுக்கு ஒரு அன்புக் காணிக்கையைக் கொடுத்தார். அது நெய் கலந்த ஒரு பிடி பச்சை அரிசியே இதை சிவபெருமானும் உண்டார். நந்தியும் உண்டார். ஊர்ப் பாபத்தை மனிதனின் பாபத்தை ஏற்று அவர்களின் பாபம் இவ் அரிசியை உண்டதனால் தொலைந்தது. வாய் நாற்றமெடுப்பது சமைத்த உணவினால்தான், வாய் நாறும் போது பச்சரிசியைப் போட்டு மென்றால்வாய் நாற்றம் உடனே ஒழியும். இதைப் போன்று பிரதோஷ தரிசனம் செய்து பிரதோஷ அரிசியை உண்டால் மனிதனுக்கு நல்வாக்கு பிறக்கும் அறிவு மலரும்.

ஸ்ரீ அம்பாள் உபாசகர்
A.R.R. சுதர்சன ஐயங்கார்,
திருச்சி 17
போன் 9840369513

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.